# ஸ்ரீமாவை அழைத்து பொது வரவேற்பு அளிக்க வேண்டும்

JAFFNA COLLE…
1 JUN 19…
UNDERGRAD…

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 108
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 17 ரபி. அவ் 24 ஞாயிற்றுக்கிழமை [31-5-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 8-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| 1 வருடம் | ரூ.9 6-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்.

## யாழ். மாநகர சபைக்கு வரவிருக்கும் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு புதிய பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து மாநகரசபை கௌரவிக்கவேண்டும் என்று கோரும் பிரேரணையொன்று யாழ்ப்பாணம் மாநகரசபையில் விரைவில் கொண்டுவரப்படவிருக்கின்றது.

இதற்கான முன்னறிவித்தல் ஒன்றை மாநகரசபை அங்கத்தவர் ஜனாப் எம். ஏ. ஏ. எஸ். ஏ. காதர் சமர்ப்பித்திருக்கிறார்.

சமூகங்களுக்கிடையில் நல்லெண்ணத்தையும், சுமுக உறவையும் வளர்க்கும்வகையில் இலங்கையின் புதிய பிரதம மந்திரியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை வெகு விரைவில் இங்கு அழைத்து மாநகர சபையின் சார்பில் பொது வரவேற்பொன்றை அளிக்க வேண்டும் என்று ஜனாப் காதர் தமது பிரேரணையில் குறிப்பிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அடுத்த கூட்டத்தில் இந்தப் பிரேரணைமீது முடிவெடுக்கப்படும் என்று தெரிகின்றது.

## வடக்கு கூட்டணி தலைவர்கள் கொழும்பில்

யாழ்ப்பாணம், ஞாயிறு வடபகுதியில் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் விசேஷ அழைப்பின் பேரில் கொழும்பு சென்றிருக்கிறார்கள்.

கூட்டணிக் கட்சியில் தலைமைப் பீடமே அங்கு இவர்களைத் தந்தி மூலம் அழைத்தது.

முக்கியமான சில பிரச்னைகள் குறித்து இவர்களுடன் கலந்தாலோசிப்பதற்காகவே இவர்களை அங்கு அழைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் அபேட்சகர் திரு. வி. பொன்னம்பலத்துக்கு அங்கு வரும்படி திரு பீட்டர் கெனமன் தந்திமூலம் அறிவித்திருந்தார்

## பிரதமரை சந்தித்தனர்

கோட்டை, ஞாயிறு முப்படை தளபதிகளும் வியாழக்கிழமையன்று புதிய பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்தனர் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது குறித்து அவருடன் கலந்தாலோசித்தனர்.

## டியூப்செக் கட்சியிலிருந்து விலக்கப்படுவார்?

அங்கரா, மே 30 செக்கோஸ்லவேக்கியதுருக்கி தூதுவராகக்கடமையாற்றிய செக்கோஸ்லவேக்கிய கம்யூனிஸ்ட்கட்சி முன்னாள் செயலாளர் டியூப்செக் அங்கராவிலிருந்து பிராக்நகருக்குத் திரும்பிவிட்டார். டியூப்செக்கின் தாயாரின் கடுமையான சுகயீனம் காரணமாகவே இவர் நாடு திரும்பியதாக செய்திகள் கூறின. அதேவேளையில் இவர் கட்சியிலிருந்துவெளியேற்றப்படலாமென செக்கோஸ்லவேக்கியாவிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்கத்துடன் பூரணமாக ஒத்துழைத்து, அரசாங்கத்தின் திட்டங்களை தீவிரமாக அமுல்நடத்தத்தவறும் சில தலைவர்களை பதவி நீக்கம் செய்யவும் செக்கோஸ்லவக்கிய கம்யூனிஸ்ட் தலைமைப்பீடம் முடிவுசெய்துள்ளது.

# தீய சக்திகளின் முயற்சிக்கு இடம் கொடுக்காதீர்!

## அமைதியைப் பாதுகாக்க பிரதமர் ஸ்ரீமாவின் உருக்கமானவேண்டுகோள்

கோட்டை, சனி "உலக மக்களின் கவனத்தில் எமது வெற்றியை மாசுபடுத்த தீய சக்திகள் எடுத்த சில நடவடிக்கைகயின் எதிரொலியாக நாட்டில் நடைபெற்ற சில வன்செயல்கள் இருக்கலாம்" என நேற்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார [illegible] விடுத்த [illegible] அறிக்கையில் கூறியுள்ளார்.



...டும்.

நாட்டுமக்கள் உண்மையாக அங்கீகரித்த திட்டத்தை அமுல் நடாத்தி முன்னேற்றத்தின் பெறுபேற்றை எய்த உதவ நாட்டு மக்களை அழைக்கின்றேன்.

சமாதானத்தையும், ஒழுங்கையும் பேணி நீதியை நிலை நாட்டுவோம். பணிவாகவும் அன்புடனும் எம்மை ஆதரித்த மக்களின் பெரு மகிழ்வுக்காக நீதியை ஒரு

## உலகப் பத்திரிகைகள் பாராட்டு

லண்டன், மே 30 உலகப் பத்திரிகைகள் இலங்கையில் கூட்டு முன்னணி வெற்றி பெற்றுள்ளதைப் பாராட்டி செய்திகள் வெளியிட்டுள்ளன.

எகிப்திய பிரபல பத்திரிகையான 'கொஸ்கௌரியா' வெளியிட்டுள்ள செய்தியில் 'இலங்கையில் கூட்டு முன்னணிக்கு கிடைத்துள்ள வெற்றி அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு கொடுக்கப்பட்ட சாட்டை அடி' எனத் தெரிவித்துள்ளது. எகிப்திய பத்திரிகையான 'அக்அக் ராம்' யூகோசிலவேக்கியா பத்திரிகையான 'கன்கு' போன்றவை முற்போக்கு சக்திகளுக்கு கிடைத்துள்ள வெற்றி என்று கூறியுள்ளன.

சோவியத்யூனியனின் அதிகாரபூர்வமான பத்திரிகை ...ளது.

"ஆசிய மக்களை ஏகாதிபத்தியத்துக்கு அடிமையாக்கத் தூண்டிவிடும் சக்திகளை மக்கள் முறியடித்துவிட்டார்கள். முற்போக்குச் சக்தி ஈழத்தில் வெற்றிபெற்றுவிட்டது" என்று தன் பாராட்டில் தெரிவித்துள்ளது

உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் புதிய பிரதமரை வாழ்த்தி வாழ்த்துச்செய்திகள் குவிந்தவண்ணமிருக்கிறன.

'பிராவ்டா' வெளியிட்டுள்ள செய்தியில், 'ஆசிய நாடுகளுக்கெதிராக ஆசிய நாட்டு மக்களைத் தூண்டிவிடும் ஏகாதிபத்திய கொள்கையை இலங்கைநாட்டுமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இலங்கையில் நடந்துமுடிந்த பொதுத்தேர்

# உலகச் செய்திகள்

## இந்திராவுக்கு கல்லெறிந்தவர்கள் விடுதலை!

புதுடில்லி, மே 30 ஒரிசாவில் நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மீது கல்லெறிந்து, குழப்பம் விளைவிக்க முயன்றதாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 6பேரும்

...யோர்க்கில் இன்று காலமானார்.

68வயதான ஜோன்கன்சர் உலக நாடுகளின் பத்திரிகை நிருபராகப் பணிபுரிந்தவர். 1922ம் ஆண்டு தொடக்கம் 1936ம் ஆண்டுவரை லண்டன், மெக்ஸிக்கோ, பேர்ளின் மற்றும் மேற்கு ஆசிய நாடுகளில் அமெரிக்க பத்திரிகை நிருபராகக் கடமையாற்றினார்.

0 0 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமாவோ பண்டார ... அறிக்கையில் கூறியுள்ளார்.

கொழும்பிலும் மற்றும் சில இடங்களிலும் வின் செயல் சம்பவங்கள் சில நடந்திருப்பதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து மக்களை அமைதியாகவும் ஒழுங்காகவும் இருக்கும்படி கேட்டுக்கொள்ளும் முகமாக இந்த விசேஷ அறிக்கையை விடுத்தார்.



அவ்வறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

முன்னைய அரசாங்கம் வீழ்ச்சி அடையும் பட்சத்தில் ஏற்படக்கூடிய தீய விளைவுகளின் சாத்தியக் கூறுகள் பற்றி ஏற்கனவே கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம்கோபல்லவாவிடம் நாம் முறையிட்டிருந்தோம் என்பதை மக்கள் அறிவர்.

மக்கள் எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த திட்டத்தை தீவிரமாக முன்னெடுத்துச் சென்று அமுலாக்க சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல் அவசியம்.

மே மாதம் 27-ம் திகதி நாம் அடைந்த மகத்தான வெற்றியை பேணிக்காப்பதில் எமது ஆதரவாளர்களும், மக்களும் கவனமாக இருக்கவேண்டும். சமாதானத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதில் மக்கள் எம்முடன் பூரணமாக ஒத்துழைப்பு நல்கவேண் ...

... நிலை நாட்டுவோம். பணிவாகவும் அன்புடனும் எம்மை ஆதரித்த மக்களின் பெருமகிழ்வுக்காக நீதியை ஒரு ஆயுதமாகக் கொண்டு போராடுவோம். மக்கள் எம் மீது கொண்ட நம்பிக்கையை சேவையால் உறுதிப் படுத்துவோம்.

### மக்கள் வெற்றி

1956-ம் ஆண்டு எனது கணவர் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆரம்பித்த சமூகப் புரட்சியை தொடர்ந்து எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்துள்ளீர், இது என்வெற்றியோ அன்றி என் கட்சியின் வெற்றியோ அல்ல. இது மக்களின் வெற்றி என்று தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

### தேர்தலுக்கு முன் தெரிவித்த அச்சம்

முன்னைய அரசாங்கம் தோல்வியடையும் பட்சத்தில் நாட்டில் ஏற்படக்கூடிய தீய சக்திகளின் நடவடிக்கைகள்பற்றி தேர்தலுக்கு முன்னரே மகாதேசாதிபதியிடம் தாமும் தமது கூட்டணித் தலைவர்களும் தெரிவுத்திருந்த அச்சம் பற்றியும் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

'உள்நாட்டு நிலைமைகளைப் பெரிதுபடுத்தி, உலக மக்களின் கவனத்தில் மாசு படுத்தும் நோக்கத்துடன் தீய சக்திகள் எடுத்துவரும் நடவடிக்கைகளை முறியடிப்பதில் நாட்டுமககள் ஒத்துழைக்க வேண்டும் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டும்பொருட்டு அவதானமாயிருக்க வேண்டும்' என்றும் நாட்டு மக்களிடம் பிரதமர் கேட்டுககொண்டிருக்கிறுர்

... கிடைத்துள்ள வெற்றி என்று கூறியுள்ளன.

சோவியத்யூனியனின் அதிகாரபூர்வமான பத்திரிகையான 'பிராவ்டா', புதிய பிரதமர் சிறிமாவுக்குப் பாராட்டுத் தெரிவித்துள் ... கையை இலங்கைநாட்டுமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இலங்கையில் நடந்துமுடிந்த பொதுத்தேர்தல் முடிவு எடுத்துக்காட்டுகிறது' எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஆட்சிமன்ற ஆசனத்தில் துரித மாற்றம்!

கோட்டை, சனி

பார்லிமெண்டில் ஆசனங்கள் போடப்பட்டுள்ளமுறையில் இப்போது சில மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன, கூட்டு முன்னணி வேட்பாளர்கள் 115 பேரும் அரசாங்க வரிசையில் அமருவதற்கு போதிய அளவு ஆசனமில்லாததாலேயே இந்த மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

இதனுல் பார்லிமெண்ட் அதிகாரிகள் இதற்கான மாற்றத்தை துரிதமாகச் செய்து வருகின்றனர்.

# தொழிற்சங்கங்கள் ஆதரவு

கோட்டை, சனி

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான மக்கள் அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்புத்தருவதாக பல தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தொழிற்சங்கங்களின் தலைவர்கள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில், நாசகாரர் செய்யக்கூடிய எந்தவித செயல்களையும் சமாளிக்கத் தமது அங்கத்தவர்கள் தயாராகவிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்துடன் பூரணமாக ஒத்துழைத்து, அரசாங்கத்தின் திட்டங்களை தீவிரமாக அமுல்நடத்தத்தவறும்

# பாகிஸ்தான் ஜனாதிபதி பாராட்டு

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜாக்கியாகான பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு அனுப்பிவைத்துள்ள பாராட்டுச்செய்தியி தமது மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்

இரு நாடுகளுக்குமிடையிலான ராஜ்ய உறவுகள் ஸ்ரீமாவோவின் பதவிக்காலத்தில் பலப்படுத்தப்படுமென தாம் நம்புவதாகக் கூறிய பாகிஸ்தான் ஜனாதிபதி, இலங்கை மக்களின் முன்னேற்றத்துக்கும், வளத்திற்கும் புதிய அரசாங்கம் அக்கறைகாட்டுமென தாம் நம்புவதாகக் கூறியுள்ளார்.

... இந்திராகாந்தி மீது கல்லெறிந்து, குழப்பம் விளைவிக்க முயன்றதாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 6பேரும் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

குற்றத்தை நிருபிக்கமுடியாததினுல் இவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர். பிரதமர் காந்தியின் முதுகில் கல்லெறிபட்டதாக கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது.

0 0 0

### அமெரிக்க எழுத்தாளர் மரணம்

நியுயோர்க், மே 30

அமெரிக்க பிரபல எழுத்தாளர் ஜோன்கன்சர் நியு ... ளின் மற்றும் மேற்கு ஆசிய நாடுகளின் அமெரிக்க பத்திரிகை நிருபராகக் கடமையாற்றினார்.

0 0 0

### பிரிட்டனில் தேர்தல்பிரசாரம்

லண்டன், மே 30

பிரிட்டனில் அரசாங்கம் கலைக்கப்பட்ட 10 நிமிட நேரத்திற்குள் சூருவளி வேகத்தில் பொதுத்தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பித்து விட்டன.

தொழிற்கட்சியும், கொன்சவேட்டிவ் கட்சியும் தேர்தல் பிரசாரங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

# தேர்தல் மோதல்: இன்ஸ்பெக்டர் பலி

கொழும்பு, சனி

வரக்காப்பொலையில் தேர்தல் முடிவுகளையடுத்து நேற்று ஏற்பட்ட அசம்பாவிதங்களின்போது பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொல்லப்பட்டார்

முன்னுள் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநயக்காவின் டெடிகம தொகுதியின் பிரதான நகரங்களில் ஒன்ருன வரக்காப்பொலையில் சில கடைகளை சனக்கூட்டம் தாக்கியபொழுது அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் முயற்சி செய்தனர். இன்ஸ்பெக்டர் பால்தாஸார் என்பவரின் தலைமையில் கலவரங்களை அடக்க பொலிசார் முயற்சி செய்தபொழுது கூட்டத்திலிருந்து எறிகுண்டு வீசப்பட்டதினுல் இன்ஸ்பெக்டர் கொலையுண்டதாகத் தெரிகின்றது. தேர்தலுக்கு முன்னர் ஏற்பட்ட ஆத்திரமே இந்தச் சம்பவத்துக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின்னரே சனக்கூட்டம் கலைந்து சென்றது. இதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இப்பகுதியிலுள்ள கடைகள் அனைத்தையும் மூடிவிடும்படி பொலிசார் உத்தரவிட்டதுடன், பொலிஸ் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (சி. பி. ஏ)

# வீண் வதந்திகளுக்கு இடமளிக்காதீர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வீண் வதந்திகளைச் சிலர் பரப்புவதாகவும் வதந்திகள் தான் நாட்டின் அமைதியைக் குலைக்கவும் விஷமத்தனத்துக்கு இடம் கொடுப்பதாகவும் இது விஷயத்தில் பொது மக்கள் எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருக்க வேண்டுமென்றும் வட பகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கப்பால் பல இடங்களிலும் பலபல சம்பவங்கள் நிகழ்வதாகச் சிலர் விஷமத்தனமாக வதந்திகளைப் பரப்பி வருவதாகவும் இந்த வதந்திகள் பற்றித் தம்மிடம் சிலர் விசாரித்ததைத் தொடர்ந்து தாம் வடமத்தியமாகாணம், மற்றும் மாகாணங்களிலுள்ள பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது அப்படி எதுவும் பெரிய சம்பவங்கள் நிகழவில்லையெனத் தமக்கு அவர்கள் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தப் பகுதிகளில் சில சில இடங்களில் சிறுசிறு சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

### பல்கலைக்கழகம்

சில சம்பவங்கள் காரணமாக மூடப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழகம் மீண்டும் ஜூன் மாதம் முதல் திகதி திறகப்படுமென முன்னர் அறிவிககப்பட்டிந்த போதிலும் அநேகமாகமுதல் திகதி அது திறககப்பட மாட்டாதென்றும் மேலும் சில நாட்களுககு அதுமூடப்பட்டிருககுமென்றும் எதிர்பார்ககப்படுகிறது.

வட பகுதியில் சிலசில இடங்களில் சிறுசிறு சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகவும் இந்தச் செயல்கள் கட்டுப்படுக்தப் பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் அவரது மனைவியுடன் சென்றபோது கைதடியில் சிலர் தடுத்து நிறுத்தி பயமுறுத்த முயன்றதாகப் பொலிசுககுத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அப்பகுதியில் பொலிஸ் ரோந்து நடவடிககை பலப்படுத்தப்பட்டுள்ளது.

### நாசவேலை

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரி கிராமசபையால் சலவைத் தொழிலாளர்களுக்கென கட்டப்பட்ட 10 தொட்டிகளை சில விஷமிகளால் உடைக்கப்பட்டு விட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது,

இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் பொலிஸார் முத்தையா என்பவரை கைது செய்துள்ளனர். சின்னத்துரை கந்தையா என்பவரைத் தேடி வருகின்றனர்.

### இன்று

வில்லூன்றி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் 7-ந் திருவிழாவாகிய இன்றுகாலை 8 மணிக்கு அபிசேகமும் பகல் 9 மணிக்கு புற்பப்பல்லக்கில் வீதிவலமும், இரவு பஞ்சதருவிருட்சத்தில் சுவாமி வெளிவீதிவலம் வருதலும் நிகழும்.

இன்று மெக்ஸிக்கோவில் ஆரம்பமாகும்

# உலக உதை பந்தாட்ட வெற்றிக்கிண்ணப் போட்டி

மெக்ஸிக்கோ, மே 30

உலக உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணப் போட்டி இன்று மெக்ஸிகோவில் ஆரம்பமானது. நான்கு வருடத்துக்கு ஒரு தடவை நடைபெறும் இப்போட்டி கடந்த தடவை 1966-ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்றது.

மெக்ஸிக்கோவில் இன்று ஆரம்பமாகும் போட்டியில் வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிக்கொள்வதற்காக 16 நாடுகள் மோதிக்கொள்கின்றன.

கடந்த தடவை இங்கிலாந்து வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

இன்று ஆரம்பமாகும் இப்போட்டி அடுத்த மாதம் 20-ந் திகதி வரை நடைபெறும். 25 ஐரோப்பிய நாடுகள் உட்பட 42 நாடுகள் இப்போட்டியை மறு ஒலிபரப்பு செய்யும்.

வடஅமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஆசியா ஆகிய கண்டங்களுக்கு இப்போட்டி சம்பந்தமான படங்களை தத்ரூபமாக எடுத்து அனுப்புவதற்கு 'செய்மதிக் கிரகம்' உபயோகிக்கப்படும்.

இன்று ஆரம்பமாகும் போட்டியை குழப்பக்காரர் யாராவது குழப்பாமலிருக்கத் தடுக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைக்காகவும் 20,000 பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சோவியத் யூனியன், பிரேஸில், உருகு, அவுஸ்திரேலியா இத்தாலி, இங்கிலாந்து, சுவிட்ஸார்லாந்து உட்பட பதினுறு நாடுகள் இன்று ஆரம்பமாகும் போட்டியில் கலந்துகொள்கின்றன. (தே. நி.)

# இந்தியாவிலுள்ள இலங்கை தூதுவர் திருப்பி அழைக்கப்படுவார்?

## வெளிநாட்டுத் தூதரகம் நிரந்தர காரியதரிசிகளில் மாற்றம்

கொழும்பு, சனி

வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரக பதவிகளில் மாற்றங்கள் ஏற்படலாம். முதற்படியாக புதுடில்லியில் இலங்கை தூதுவர் திரு. ஸ்ரீபெரேரா திருப்பி அழைக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது, முன்னைய பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவால் இவர் நியமனம் பெற்றவராவர். இவருக்குப் பதிலாக மற்றொருவரை புதிய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால் நியமிககப்படுவார் எனத் தெரியவருகிறது.

நிரந்தரக் காரியதரிசிகள் கூட்டுத்தாபன டைரக்டர் பதவிகளிலும் முக்கியமான மாற்றங்கள் ஏற்படலாம் எனத் தெரியவருகிறது.

இஸ்ரேலிய ராஜிகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு, இங்குள்ள தூதரகமும் மூடப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப் பகுதி

ஜி. சி. இ. (உயர்தரம்)
பிரவேசம் - ஜூன் 1970

விபரங்களுக்கு -/50 சதத் தபாற் கட்டளையுடன் சொந்த விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டியதுமான நீண்ட தபாலுறை அனுப்புதல் வேண்டும்.

ஜி. சி. இ. சாதாரண பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பங்கள் ஜூன் 5-ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்.

வட்டுக்கோட்டை. 2288

## வரி விளம்பரம்

### தேவை

உதவி மனேஜர், உபலிகிதர் தேவை. இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் மாலை 4 மணி முதல் 5 மணி வரை நேரில் விண்ணப்பிக்குக. ஜனு செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 2266

### விற்பனைக்கு

எந்திர சாதனங்களினால் தயாரிக்கப்பெற்ற ஒட்டக மார்க் செங்கற்கள் விற்பனைக்குண்டு உடனே ரில்லர் ஒன்றும் விற்பனைக்குண்டு. ஜனு செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 2265

சுன்னுகம் புகையிரத நிலையம், மின்சாரநிலையம் முதலியவற்றிற்கு அருகாமையில் சுன்னுகம் - புத்தூர் றேட்டில் 5 பரப்பு பனைவளவு விற்பனைக்குண்டு. திருமதி சிதம்பரநாதன், உடையார் வளவு, சுன்னுகம். 2246

யாழ்ப்பாணம் நாவற்குழியில் கண்டி வீதி அண்மையில் குடியிருப்பதற்கேற்ற நான்கு பரப்பு விஸ்தீரணமான நாற்பது துண்டுகள் விற்பனைக்குண்டு. தென்னைகள், நல்ல தண்ணீர், மின்சாரம் உள. நல்ல சூழல், மத்திய வகுப்பினர் குடியேற்றத்துக்கு ஏற்ற இடம், பெரியகடையிலிருந்து பஸ் கூலி பதினைந்து சதம். எழுத்து மூலம் விண்ணப்பிக்க. லான்ட் இன் வெஸ்ற்மென்ற், 6, பெரியதெரு, யாழ்ப்பாணம். 2263

### வாடகைக்கு

வீடு:

காங்கேசன்துறை வீதி 4 3/4கட்டைக்கு முன்பதாக இராமனுதன் பெண் பாடசாலைக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வாடகைக்கு விடப்படும். இராசஇரத்தினம், சிவஞானகிரி, இணுவில். 225


தேர்தல் களத்தில் கடைசி அத்தியாயம்:

# அமிர்தலிங்கத்தை முதலில் பேசச் சொன்னார் புதிய எம். பி.!

## அண்ணா காஞ்சியில் தோற்றதை நினைவு படுத்தி ஆறுதல்சொன்னார்

நமது அலுவலக நிருபர்
கா. யோகநாதன்

யாழ்ப்பாணக் கச்சேரியில் வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்டுக்கொண்டிருந்த சமயம் போட்டியிட்ட அபேட்சகர்கள் சிலர் அங்கு சமுகமளிக்கவில்லை. உடுப்பிட்டியில் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. எம். சிவசிதம்பரமும், பருத்தித்துறையில் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. என். நடராசாவும் கச்சேரிக் 'கன்ரீனில்' காணப்பட்டனர். அவர்கள் இருவரும் தமது நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தனர்.

வட்டுக்கோட்டைத் தொகுதியின் வாக்குகள் எண்ணப்பட்ட அறையின் வெளியில் ஒரே சனக் கூட்டம். சிவப்புச் சட்டை அணிந்திருந்த வாலிபர் ஒருவரை இன்ஸ்பெக்டர் ஒருவர் அங்கிருந்து வெளியேற்றினார். பொலிஸ் உத்தியோகத்தர்



களே அந்த அறையை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தனர். திரு. ஏ அமிர்தலிங்கம் அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தார் திருமதி அமிர்தலிங்கம் இரவு முழுவதும் நின்றபடியே வாக்குச் சீட்டுகள் எண்ணப்படுவதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். திரு. ஏ. தியாகராசா வலது பக்கத்தில் உள்ள கதிரையொன்றில் அமர்ந்தபடி இருந்தார். யாரைக் கேட்டாலும் 'சரியான போட்டி' என்றே சொன்னார்கள்.

### தேம்பித்தேம்பி அழுதனர்


வாக்குப் பெட்டிகளில் உள்ள சீட்டுகள் கலந்து மொத்தத் தொகை எண்ணப்பட்டது அதன்பின் வெவ்வேருகப் பிரிக்கப்பட்டு எண்ணப்பட்டது அப்படி எண்ணப்படும்போது இருவருக்கும் சரிசமமாகவே இருந்துகொண்டிருந்தது. யார் வெற்றிபெறுவார்கள் என்று எவராலும் சொல்ல முடியாமல் இருந்தது. திரு தியாகராசாவிற்கு வாக்குகள் கூட இருப்பதாகக் கூறப்பட்டதும் வெளியில் பார்த்துக்கொண்டிருந்த சில வாலிபர்கள் தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தார்கள். திருமதி அமிர்தலிங்கம் மனம் கலங்கியபோதும் திரு அமிர்தலிங்கம் அதனைச் சமாளித்துக்கொண்டார்.

அரசாங்க அதிபர் இருவரையும், பழைய பூங்காவிற்கு வானில் அழைத்துச் சென்ருர். இருவரும் சென்றபடியால் யார் வெற்றிபெற்ருர்கள் என்பதை எவரும் அறியமுடியாமல் இருந்தது. அரசாங்க அதிபர், திரு. ஏ. தியாகராசா வெற்றிபெற்றுவிட்டதாக அறிவித்து அவரைப் பேசும்படி அழைத்தார். அப்போது திரு. தியாகராசா திரு. அமிர்தலிங்கத்தை முதலில் பேசும்படி கேட்டுக்கொண்டார். திரு. அமிர்தலிங்கம் தியாகராசாவையே முதலில் பேசும்படி கூறினர் திரு தியாகராசா தமது ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

### திருமதி 'அமிர்' கண்கலங்கினர்

அதன் பின்னர் திரு. அமிர்தலிங்கம் பேசும் [illegible] திற்காகப் போராடப்போவதாகவும் கூறினர். மேடைக்கு அருகே நின்ற திருமதி அமிர்தலிங்கம் அச்சமயம் கண்கலங்கினர், திரு அமிர்தலிங்கம் மேடையை விட்டிறங்கியதும் வாலிபர்கள் அவரை கட்டிப்பிடித்து கதறி அழுதார்கள் திரு அமிர்தலிங்கம் அவர்களை தேற்றினர்.

நல்லூர் தொகுதி வாக்குகள் எண்ணப்பட்ட அறைக்கு வெளியில் எவரும் நிற்க அனுமதிக்கப்படவில்லை பழைய கச்சேரி மேல்மாடியில் தான் நல்லூர் தொகுதி வாக்குகள் எண்ணப்பட்டன இரவு 12-00 மணிக்கு நான் அங்கு சென்றபோது தமிழர் சுயாட்சி கழகம் சார்பில் போட்டியிட்ட திரு. அ இரத்தினம் வெளியில் ஒரு கதிரையில் உட்கார்ந்திருந்தார் 'எப்படியிருக்கிறது?'' என்றேன். அருளம்பலம் தான் வெற்றிபெறுவார்என்ருர். தான் எதிர்பார்த்த அளவு தனக்குக் கிடைக்கவில்லையென்றும் கூறினர்



காங்கேசன் துறைத் தொகுதி முடிவுகள் அறிவிப்பதற்காக திரு செல்வநாயகம் திரு சி. சுந்தரலிங்கம், திரு வி. பொன்னம்பலம் ஆகியோரை அரசாங்க அதிபர் பழைய பூங்காவிற்கு அழைத்துச் சென்ருர். திரு ரி. திருநாவுக்கரசு நேராக தமது காருக்கு சென்று கொண்டிருந்தார்.

காங்கேசன்துறையில் இம்முறை திரு எஸ். ஜே. விக்கு சரிக்குச்சரியான போட்டி போட்ட கூட்டணி வேட்பாளரான கம்யூனிஷ்ட் திரு வி பொன்னம்பலத்தின் பேச்சு பலரையும் கவரக்கூடியதாக அமைந்திருந்தது.

புதிய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் தீங்கிழைக்க மாட்டாது. தமிழ் எம்.பிக்கள் புதிய அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்' என்று உருக்கமான ஒரு வேண்டுகோளை அவர் விடுத்தார்.

செல்வாவும் அவர்களுடன் இணைந்து செயல்படுவார் என்றும் நம்பிக்கை

### கழுத்தில் பண்டேஜ்

முதலாவதாக நல்லூர் தொகுதி முடிவுதான் அறிவிக்கப்பட்டது திரு. அருளம்பலம், டாக்டர் நாகநாதன் ஆகியோர் பழைய பூங்காவிற்கு வந்தனர். திரு. அருளம்பலத்திற்கு பெரிய ஒருமாலை சூட்டப்பட்டது அவர் நன்றிதெரிவித்துப் பேசியதும் டாக்டர் நாகநாதனும் பேசினர். அவரது கழுத்தில் 'பண்டேஜ்' போடப்பட்டிருந்தது.



ஊர்காவற்றுறை தொகுதி வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்ட அறைக்கு யன்னல்கள் இருந்ததால், வெளியிலிருந்து பலர் பார்க்கக் கூடியதாக இருந்து. பண்டிதர் க. பொ. இரத்தினம் வெற்றிபெறுவார் என்பது இரவு 12 மணியளவில் தெரிந்துவிட்டது மற்ற அபேட்சகர்களின் முகங்களில், மகிழ்ச்சிக்குறி எதுவும் காணப்படவில்லை. பண்டிதர் இரத்தினம் கல



கலப்பாக அங்கும், இங்குமாக, நடந்து கொண்டிருந்தார். நேரம் போகப்போக அவரது வாக்குகள் அதிகரித்துக்கொண்டிருந்தது. திரு. நவரத்தினம், நண்பகல் 12 மணிக்கு பின்னர் ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டிருந்தார். அவரது ஆதரவாளர் மத்தியிலும் மகிழ்ச்சியை காணமுடியவில்லை, கடைசியில் பண்டிதர் இரத்தினம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி தொகுதி வாக்குகள் எண்ணப்பட்ட அறைக்கு வெளியில் பலர் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தனர். திரு. வி. என். நவரத்தினத்துடன், திருமதி நவரத்தினமும் வந்திருந்தார். திரு வி. குமாரசாமி ஆரம்பத்தில் சுறுசுறுப்பாக காணப்பட்ட போதிலும் இரவு 1 மணிக்குப் பின் அவரது முகத்தில் கவலை ரேகை படிந்திருந்தது. ஆரம்பத்தில் திரு. குமாரசாமியின் வாக்குகள் கூடிக்கொண்டிருந்தது. இதனுல் எவர் வெற்றி பெறுவார் என்று சொல்ல முடியாமலிருந்தது. திருமதி நவரத்தினம் எண்ணப்படும் ஒவ்வொரு வாக்குகளையும் மிகவும் கவனமாக அவதானித்துக் கொண்டிருந்தார். இரவு 2 மணிக்குபின் திரு. நவரத்தினத்



தின் வாக்குகள் கொஞ்சம் கொஞ்சமாக கூடிக்கொண்டிருந்தது. சாவகச்சேரி தொகுதி முடிவு அதிகாலை ஜெயக்கொடி, மற்றும் அபேட்சகர்கள் எண்ணிக்கை நடந்த அறையில் காணப்பட்டனர்.

காங்கேசன்துறை. உடுப்பிட்டி தொகுதி வாக்குகள் மறுநாள் காலைவரை எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன. இரு தொகுதிகளிலும் தமிழரசுக்கட்சி அபேட்சகரே வெற்றி பெறுவார் என்பது தெரிந்து விட்டது. நன்ருக விடிந்த பின்னரும் பழைய பூங்காவில் ஜனத்திரள் காணப்பட்டது. உடுப்பிட்டித் தொகுதியில் திரு. ஜெயக்கொடி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அதன் பின் காங்கேசன் துறைத் தொகுதி முடிவுகள் அறிவிக்கப்பட்டது.

கோப்பாய்த் தொகுதி முடிவுகள் எண்ணப்பட்ட அறைக்கு வெளியில் நிற்பதற்கு பொலிசார் எவரையும் அனுமதிக்கவில்லை. நள்ளிரவு 2 மணிக்கே திரு. கதிரவேற்பிள்ளைக்கு வாக்குகள் அதிகரித்துக் கொண்டிருப்பதாக தகவல் கிடைத்தது அதிலிருந்தே அவர் வெற்றி பெறுவார் என்ற பேச்சு அடிபட்டது. கடைசியில் கூடிய மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்ருர்.

வடமாகாணத் தொகுதிகளை தவிர்ந்த மற்ற தொகுதிகள் முடிவுகளும், உடனுக்குடன், பழைய பூங்காவில் காத்திருந்த மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. முதலாவதாக, திருக்கோணமலையில் திரு. நேமிநாதன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதும், பல இடங்களில் வெடிகள் கொளுத்தப்பட்டன.

உடுவில் தொகுதி வாக்குகள் எண்ணப்பட்ட அறையில் கடைசியில் தோல்வியுற்ற அபேட்சகர்கள் கலகலப்பாகக் காணப்பட்டனர் திரு. தர்மலிங்கம் இரு தடவைகள் வெயில் வந்து தமது ஆதரவாளர்களுடன் கதைத்துவிட்டு மீண்டும் சென்ருர். திரு. தர்மலிங்கத்திற்கும் திரு. சிவனேசனுக்குமே போட்டி என்பது ஆரம்பத்திலேயே தெரிந்துவிட்டது. கடைசியில் திரு. தர்மலிங்கத்தின் வாக்குகள் கூடிக்கொண்டிருந்தன. இத்தொகுதியில் திரு. தர்மலிங்கம் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

வடபகுதி தேர்தல் முடிவுகளை அறிவதற்கு ஆவல் கொண்டிருந்த மக்கள் அதே சமயம் தென் பகுதி முடிவுகளையும் அறிவதற்கு ஆவல் கொண்டிருந்தனர். கூட்டாட்சியினர் பெரும்பான்மைத் தொகுதிகளை கைப்பற்றிக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டபோது இடதுசாரி கட்சியினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர், தோல்வியுற்ற கூட்டாட்சிக் கட்சி அபேட்சகர் பேசும்போதுதாம் தோல்வியுற்ருலும் நாளை அரசாங்கம் அமைக்கப்போவது கூட்டாட்சிக் கட்சிகள்தான் என்று கூறினுர்

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தென்னிலங்கை தேர்தல் முடிவுகளை அறிவதற்கு ஆவல் கொண்டிருந்தனர் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிறிய றேடியோ பெட்டிகளை வைத்திருந்து தேர்தல் முடிவுகளைக் கேட்டுக்கொண்டிருந்தனர். பழைய பூங்காவில் திரண்டிருந்தவர்களில் பலரும், கையுடன் றேடியோ பெட்டிகளையும் கொண்டு வந்திருந்தனர். சிலர் வீடுகளிலிருந்து கட்டுச் சாதம் கொண்டு வந்துசாப்பிட்டுக் கொண்டிருந்தனர். பழையபூங்கா முழுவதும், மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கட்சி வேறுபாடின்றி எல்லாரும் அங்கு ஒன்ருக சேர்ந்து கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். ஒருபக்கத்தில் நூற்றுக்கணக்கா

(3-ம் பக்கம் பார்க்க)


★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான

## "வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு — பித்தளை - மரஸ்குறு
ஆணிகளை
நீங்கள் வாங்குவதனுல்
ஒரு சிறந்த பொருளைவாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பிக்க. லாண்ட் இன் வெஸ்ற்மென்ற், 6, பெரியதெரு. யாழ்ப்பாணம். 2263

சகல வசதிகளுடன் வாடகைக்கு விடப்படும். இராசஇரத்தினம், சிவஞானகிரி, இணுவில். 2259

இப்பொழுது திரையிடப்படுகிறது
வின்ஸர்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

★ ஜெய்சங்கர்
★ ஜெயலலிதா
★ நாகேஷ் ★ சுந்தரராஜன்

நடித்த

முத்துச் சிப்பி

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்

மற்றும் பலர் நடிந்த




கன்னகலங்கிஞர்

அதன் பின்னர் திரு. அமிர்தலிங்கம் பேசும்போது தோல்வியைக் கண்டு தான் கலங்கவில்லையென்றும், 1952ம் ஆண்டுகூடத் தான் தோல்வியுற்றதாகவும், திரு. அண்ணாதுரையே காஞ்சிபுரத்தில் ஒருதடவை தோல்வியுற்ருர் என்றும் தொடர்ந்து இலட்சியத்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
நடித்த
தெய்வத்தாய்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
Montgomery Wood
in
SONS OF SATAN

ராஜா (யாழ்ப்பாணம்)
Daily 3 Shows
Rosana Podesta
in
'7 GOLDEN MEN STRIKES AGAIN'
(colour)

ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
ஷம்மி கபூர்—கஸிபரு
நடித்த
புரொபசர்
(ஹிந்தி)

REGAL JAFFNA
Daily 4 Shows
PILGRIMAGE TO MECCA
மெக்கா யாத்திரை
(color)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Olive Reer - Diana Rigg
Curt Jurgens
in
THE ASSASSINATION BUREAU
(color)

1-6-70 முதல்
K.R.விஜயா - ஜெய்சங்கர்
நடித்த
பெண்ணை வாழவிடுங்கள்



சமூகசேவைப்பகுதி அறையில் கிளிநொச்சித் தொகுதி வாக்குகள் எண்ணப்பட்டன வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்ட சமயம் கிளிநொச்சியில் தமிழரசுக்கட்சிசார்பில் போட்டியிட்ட திரு. மு. ஆலாலசுந்தரம் அங்கு இருக்கவில்லை, அவரது ஏஜண்டு மட்டுமே அங்கு காணப்பட்டார். திரு. வி. ஆனந்தசங்கரி கதிரை ஒன்றில்அமர்ந்தபடி இருந்தார், கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த பலர் கிளிநொச்சி முடிவைக் கேட்க ரோட்டில் காத்திருந்தனர், திரு. ஆலாலசுந்தரம் அங்குகாணப்படாததால் திரு ஆனந்தசங்கரியே வெற்றிபெறுவார் என்று பேச்சு அடிபட்டது. 28-ம் திகதி காலையில்தான் கிளிநொச்சி முடிவு அறிவிக்கப்பட்டது. திரு ஆனந்தசங்கரியை அரசாங்க அதிபர் பழைய பூங்காவில் அமைக்கப்பட்ட மேடைக்கு அழைத்துச்சென்று முடிவுகளை அறிவித்தார்.

காங்கேசன் துறைத் தொகுதி வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்ட அறை ஒரு நீளமான அறை அத் தொகுதியில் 4 பேர் போட்டியிட்டதால் அவர்களின் ஏஜண்டுகள் இருப்பதற்கு அது வசதியாக இருந்தது. திரு செல்வநாயகம் சிலமணிநேரம் அங்கிருந்துவிட்டு சென்றுவிட்டார். பின் அதிகாலை 5 மணியளவில் திரும்பி வந்தார் அப்பொழுதும் அத்தொகுதிச் சீட்டுகள் எண்ணப்பட்டுக்கொண்டிருந்தன. செனட்டர் எஸ். நடராசா முதல் கதிரையில் அமர்ந்திருந்தார்' கடைசிக் கதிரையில் திரு சி. சுந்தரலிங்கம் அமர்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் அவரது ஏஜண்டுகள் இருந்தனர். திரு வி. பொன்னம்பலம் ஒரு பக்கத்திலும் திருரி திருநாவுக்கரசு மறுபக்கத்திலும் அமர்ந்திருந்தனர். வாக்குச்சீட்டு எண்ண ஆரம்பிக்கப்பட்ட போதே திரு செல்வநாயகத்திற்கும் திரு பொன்னம்பலத்திற்குமே போட்டி என்பது தெரிந்து விட்டது. திரு சுந்தரலிங்கம் 5000 வாக்கு பெற்றதையிட்டு பலர் ஆச்சரியம் தெரிவித்தனர்.

அவர் விடுத்தார்.

செல்வாவும் அவர்களுடன் இணைந்து செயல்படுவார் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்,

யாழ்ப்பாணத் தொகுதி வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்ட அறைக்கு பொலிசார் எவரையும் விடவில்லை. யாழ்ப்பாண தொகுதி முடிவை அறிவதற்காக மக்கள் ஆவலோடு காத்திருந்தனர். முதல் தடவை வாக்குசீட்டுகள் எண்ணப்பட்டதும் சுமார் 4 மணியளவில், திரு ஜி.ஜி. பொன்னம்பலம் காரில் சென்றுவிட்டார். அதன் பின் வாக்குச் சீட்டுகள் இரண்டாவது தடவையாக எண்ணபபட்டு முடிந்தது. திரு துரையப்பா முதலில் வெளியில்வந்து சிரித்தபடி தமது ஆதரவாளருக்கு கைகுலுக்கிவிட்டு, சென்ருர். அதன்பின் திரு சி. எக்ஸ். மார்ட்டினை, அரசாங்க அதிபர், பழைய பூங்காவிற்கு அழைத்துச்சென்ருர். யாழ்ப்பாண தொகுதி முடிவுகள் அறிவிக்கப் பட்டபின், திரு. மார்டினை 'ஜீப்' வண்டியில் ஏற்றி ஆதரவாளர்கள், பிரதான வீதியால் அழைத்துச் சென்றனர்.



### யாருக்கு வெற்றி என்பது தெரியவில்லை!

பருத்தித்துறை தொகுதியில் யார் வெற்றிபெறுவார்கள் என்று சொல்ல முடியாமலிருந்தது: ஆரம்பத்திலிருந்தே போட்டி, திரு. துரைரத்தினத்திற்கும், திரு. நடராசாவுக்கும் தான் என்பது தெரிந்திருந்தது. வாக்குசீட்டுகள் எண்ணப்பட்ட அறையில், சில மணித்தியாலங்கள் திரு. நடராசா காணப்படவில்லை. கடைசி நேரத்தில்தான் அவர் அங்கு வந்து சேர்ந்தார். வாக்குச்சீட்டுகள் எண்ணிமுடிந்ததும், திரு நடராசா வெளியில்வந்து தான் தோல்வியுற்றதாக ஆதரவாளர்களிடம் தெரிவித்தார். அதன்பின், திரு துரைரத்தினம் வெற்றி பெற்றிருப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.



தின் வாக்குகள் கொஞ்சம் கொஞ்சமாக கூடிக்கொண்டிருந்தது. சாவகச்சேரி தொகுதி முடிவு அதிகாலை அறிவிக்கப்பட்டது. திரு வி. என். நவரத்தினத்தை அரசாங்க அதியர் பழைய பூங்காவிற்கு அழைத்துச் சென்று அவர் வெற்றி பெற்றதாக அறிவித்தார் திரு. நவரத்தினம் நன்றி தெரிவித்துப் பேசினர்.

உடுப்பிட்டி தொகுதி வாக்குகள் கச்சேரி ஆலோசனை மண்டபத்தில் எண்ணப்பட்டன. இரவு 12 மணி முதல் திரு. சிவசிதம்பரம் கச்சேரி கன்ரினில் இருந்துகொண்டிருந்தார். திரு

நீங்கள் வாங்குவதிலே
ஒரு சிறந்த பொருளேவாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்:
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழையசோனக தெரு, - கொழும்பு-12

தொலைபேசி: 33143—4.
இல 38, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530.

இதோ! புதிய
பொலித்தியோன் ஈ.சி. 100%
(பெனிட்ரேதயோன் 100%)

BAYER

இந்தப் பெயரை மறவாதீர்கள்!
எந்தப் பயிருக்கும் ஏற்ற பாதுகாப்பு இதுவே!
நெல்லைப் பாதிக்கும் நெற் சந்துக்குத்தி, தத்துக்கிளி, கொப்புள ஈ, நெல் ஈ, பனிப்பூச்சி, ஐங்கோண மூட்டுப் பூச்சி, இலையரிப்புழுக்களையும்,

அன்ஞசியைப் பாதிக்கும் மீலிபக்ஸ் புழுவையும் புகையிலை, காய்கறி, வெங்காயம், பருத்தியைப் பாதிக்கும் எல்லாப் பூச்சி புழுக்களையும் அழிக்க வல்லது பொலித்தியோன்.
பொலித்தியோன் ஈ.சி. 100% அதி வன்மை வாய்ந்தது. மிகவும் சிக்கனமானது.

2 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 4 அவு. பெனிட்ரேதயோன் 50%
4 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 8 „ „
8 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 16 „ „



பொலித்தியோன் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும்.
இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பணலாபம் பெறப் பாவியுங்கள் — பேயர் பீடை நாசினிகள்.

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி.
இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ஜன்டைன முன்னாள் அதிபர் கடத்திச் செல்லப்பட்டார்

புவனஸ் அயஸ், மே 30

ஆர்ஜன்ட்டைனுவின் முன்னாள் அதிபர் ஜெனரல் அரம்பூரோ கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்.

ஜெனரல் அரம்பூரோ கடத்திச்செல்லப்பட்ட சிறிது நேரத்தில் செய்தி ஸ்தாபனமொன்றுக்கு பெயர் குறிப்பிடாத ஒருவர் டெலிபோன் செய்து இன்னும் சிறிது நேரத்தில் அவர் கொல்லப்படுவார் என்று கூறியதாகத் தெரிகின்றது.

ஆனால் ஜெனரல் அரம்பூரோ பற்றிய தகவல் எதுவும் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் கிடைக்கவில்லை

1955-ம் ஆண்டு ஆர்ஜன்ட்டைனுவில் ஏற்பட்ட புரட்சியின் பின்னர் ஜெனரல் அரம்பூரோ மூன்று ஆண்டுகள் அதிபராக இருந்திருக்கிறார்.

ராணுவ உடை தரித்த இரு இளைஞர்கள் ஜெனரல் அரம்பூரோவை துப்பாக்கி துணையில் கடத்திச்சென்றுள்ளனர்.

கம்யூனிஸ்ட் புரட்சிவாதிகளினால் இவர் கடத்தப்பட்டிருக்கவேண்டுமென்று கருதப்படுகின்றது.

ஏற்கனவே ஆயுதக்கிடங்கொன்றிலிருந்து ஏராளமான ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் புரட்சிவாதிகள் கடத்திக்கொண்டு போயிருக்கிறார்கள்.

## ஐரிஷ் முன்னாள் மந்திரிகள் கைது

லண்டன், மே 30

ஐரிஸ் நாட்டின் முன்னாள் நிதியமைச்சர் சார்ல்ஸ் டஃபியும், முன்னாள் விவசாய அமைச்சர் நீல்பிளேனியும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஐரிஷ் தேசிய இயக்கத்தினருக்கு ஆதரவாக ஆயுதங்களைக் கடத்திச் சென்றதாக இவர்கள் டப்ளினில் கைது செய்யப்பட்டனர்

இந்த இரு மந்திரிகளும் கடந்த மாதம் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்கள். இவர்கள் ஆயுதங்கள் கடத்தியதன் காரணமாக ஐரிஸ் அரசாங்கத்தில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது'

— —

## 700 கொலைகள்

புதுடெல்லி, மே 30

அரசியல் பலாத்கவத்தினால் எவ்விதம் முற்போக்கான அரசியல் கட்சிகளின் முயற்சிகள் வீணுகின்றன என்பதை வங்காளப்பிரமுகர்களில் ஒருவரான திரு. தருண்காந்தி கோஷ் புதுக் காங்கிரஸ் தலைவர்கள் மகாநாட்டில் விபரித்தார். முன்னாள் பிரதமர் திரு. ஏ. கே. முகர்ஜியின் அறிக்கையிலிருந்துமேற்கோள் காட்டி 700க்கு மேற்பட்ட கொலைகளுக்கும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட்டுக்கள் தாம்காரணம் என்று அவர் விளக்கிஉள்ளார்.

— —

## 4 பேர் பலியாகினர்

புதுடில்லி, மே 30

சிம்லாவிலிருந்து சுமார் 80 கிலோமீட்டர் தொலைவில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 4பேர் கொல்லப்பட்டனர் 50 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

— —

## இஸ்ரேல் மந்திரிசபையில் நெருக்கடி?

ஜெருசலம், மே 29

இஸ்ரேல் நாட்டின் மந்திரிசபையில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தேசியஒற்றுமை கூட்டணி அரசாங்கத்திலுள்ள வலதுசாரிகளின் புரட்சியை பிரதமர் கோல்டா மெய்யர் புறக்கணித்துவிடுவார்என்று கருதப்படுகின்றது. இந்த வலதுசாரிகளின் முரண்பாடுகளின் காரணமாக அரசாங்கத்தில் நெருக்கடி ஏற்படலாம் என்றும் எதிர்பார்க்கப் பட்டது.

— —

## கலைஞருக்கு பொன்னடை

பண்டத்தரிப்பு, சனி

பண்டத்தரிப்பு கோவில்பற்று சமசமாசத்தின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட மின்தறி நெசவு சாலையின் கட்டட வேலைகளை ஆறுமாத காலத்தில் சிறந்த முறையில் அமைத்துக் கொடுத்ததற்காக தலைவர் மு.வயிரமுத்து ஜே. பி., மாதகலைச் சேர்ந்த கட்டடக் கலைஞர் திரு. விஞசித்தம்பியை பொன்னடை போர்த்திக் கௌரவித்தார். சுமார் 3 லட்சம் ரூபாய் செலவில் இக்கட்டட வேலைகள் நிர்மாணிக்கப்பட்டன.

— —

## இடமாற்றம் நிறுத்தப்பட்டது!

### உண்ணாவிரதம் பலனளித்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

உண்ணாவிரதப் போராட்டம் பலனளித்தது. திடீர் இடமாற்றம் தடுத்துநிறுத்தப்பட்டது

யாழ். அரசினர் வைத்திய சாலையில் ஆண் பரிசாரகராக கடமையாற்றிய திரு. எஸ் ஆழ்வாருக்கு திடீர் இடமாற்றம் கிடைத்தது. இவ்இடமாற்றத்தை நிறுத்துமாறும், அதுபற்றி ஆராய ஒரு விசாரணைக்கமிஷன் நியமிக்கும்படியும் கோரி யாழ்: வைத்திய அதிபரின் காரியாலயத்தின் முன் தேசிய அரசாங்க சுகாதார சேவைத்தொழிலாளர் சங்க நிர்வாக உறுப்பினர்களும் உண்ணாவிரதம் செய்தனர்

இடமாற்றம் தடுத்து நிறுத்தப்பட்டதாக யாழ். சௌக்கிய அத்தியட்சகரால் அறிவித்தல் கிடைத்தது இதனையடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

## கொழும்பில்


## கடைகளில் சாப்பாடு தட்டுப்பாடு ஏற்பட்டது

கொழும்பு, சனி

புதிய பிரதமராக திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேற்று பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்வதற்காக ராணி மாளிகைக்கு வருவதைப் பார்ப்பதற்காக கொழும்பு நகரில் கூடிய ஜனத்திரளைக் கட்டுப்படுத்துவது பொலிசாருக்கு பெரும்பாடாகவிருந்தது. மக்கள் ஒரே ஆரவாரத்துடனும் மகிழ்ச்சிப் பெருமிதத்துடனும் காணப்பட்டனர்.

ஓட்டல்களில் மிக சொற்ப நேரத்தில் உணவுகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. ராணி மாளிகையின் சுற்றுப்புறம் முழுவதும் ஒரே மனித தலைகளாகவே காணப்பட்டன.

(சிபிஏ)



சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபராகக் கடமையாற்றி நேற்றுடன் ஓய்வுபெற்ற திரு மு. வைத்திலிங்கம்.

## 'துர்மரணங்களை தடுக்க குடும்பத்திட்டம் வேண்டும்'

மெல்போர்ன், மே. 30

''சட்ட விரோதமான கருத்தடை முறைகளைக் கையாள்வதால், ஆண்டுதோறும் சுமார் 500 லிருந்து 1000 வரையிலான அமெரிக்கப்பெண்கள் அகால மரணம் அடைகின்றனர். இவ்விதமான துர்மரணங்களைத் தடுக்க வேண்டுமானால், குடும்பத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். அதோடு கருச்சிதைவும், சில முக்கிய காரணங்களின் அடிப்படையில் சட்டபூர்வமாக்கப்பட வேண்டும்.''

இவ்வாறுநியுயோர்க்குடும்பத்திட்ட கிளினிக் பணிப்பாளரானடாக்டர் (திருமதி) சில்வியா மொஸ்கோஸோ லெனின் மெல்போர்னில் நடைபெற்ற சர்வதேச பெண் டாக்டர்கள் சங்கத்தின் 12-வது வருடாந்த மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''சட்ட ரீதியாகக் கருச்சிதைவு செய்வது பற்றிய முடிவை எடுக்கும் உரிமை பெண்களுக்கே இருக்கவேண்டும். இந்த உரிமையில் திருச்சபையோ, அரசாங்கமோ, வைத்திய சங்கமோ, அல்லது சட்ட நிறுவனமோ தலையிடக்கூடாது.''


## 'சிங்கள மக்களுடன் இணைந்து செயலாற்றுவேன்'

— வட்டு.எம்.பி.

அராலி, சனி

'இந்நாட்டில் தமிழராகிய நாம் சிங்கள மக்களுடன் ஒத்துழைத்து. நட்புறவு கொண்டு செயலாற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளேன். எனது கட்சியின் எதிர்காலவேலைத்திட்டங்கள் பற்றி கட்சித்தலைவர்கள் ஒன்று கூடி ஆலோசனைகள் நடாத்திய பின்னர் தான் என்னால் எதுவும் திட்டவட்டமாகக் கூறமுடியும். எமது தலைவர்களின் தோல்வி எமக்கு எதிர்பாராத ஒரு பேரதிர்ச்சியாகும்'

வட்டுக்கோட்டை தமிழ்க் காங்கிரஸ் புதிய எம். பி. திரு. ஆ. தியாகராசா அராலி மக்கள் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.



நேற்று அவர் தனது தொகுதியிலுள்ள கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கு அவர் நன்றி சொன்னார் அவருடன் அவர் துணைவியாரும் எல்லா வரவேற்பிலும் கலந்துகொண்டார்.

## சமாதானம் விரும்பும் ஆறும் சின்னப்ப தந்தை

### இன்று பொன் யூபிலி

இன்று அனைத்துலகும் பரிசுத்த தந்தை 6ம் சின்னப்பரின்குருத்துவ பொன் யூபிலியைக் கொண்டாடி மகிழ்கின்றது சமயத்துறையில் மட்டுமல்ல சமூகத் துறையிலும் பணி பல புரிந்து உலக சரித்திரத்தில் உயரிய இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் பரிசுத்த பாப்புவின் அதிமுக்கிய பணிகள் சிலவற்றை இக்கட்டுரை கூறுகிறது.

திருச்சபையின் ஆயராக மட்டுமல்ல வத்திக்கான் இராட்சியத்தின் ஆட்சியில் பொறுப்பாளராகவும் விளங்குகிறார் பரிசுத்த பாப்பு. அனைத்துலக கத்தோலிக்க மக்களின் தலைவர் என்றால் அவர் 6ம் சின்னப்பபாப்புதான் 23ம் அருளப்பருக்குப் பின் திருச்சபையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடாத்தி வருகிறார்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தை 23ம் அருளப்பபாப்பு ஆரம்பித்து வைத்தார். அதனை நடாத்தி வைக்க அவர் உயிருடன் இருக்க வில்லை. இதனைச்சிறப்புற முடித்து வைத்த பெருமை 6ம் சின்னப்ப பாப்புவையே சாரும். திருச்சபையின் பழமையான சம்பிரதாயத்தை மாற்றியமைத்தபெருமையும் இவரையே சாரும். வத்திக்கான் இராட்சியத்துள் மட்டும் அடங்கியிராமல் உலகின் பல் வேறு பகுதிகற்கும் விஜயம் செய்தார். அமெரிக்க ஐ. நா. சபை, இந்தியா என்பன குறிப்பிடத்தக்கவை, மறியற்சாலைகளிலும் ஏழைகள் விடுதிகளிலும் அதிக நேரத்தைக் கழிப்பார்.

## புதிய கருத்தடை சத்திர சிகிச்சை வெற்றி!

லண்டன், மே 30

தற்காலிகமாக பெண்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை செய்யும்முறையொன்று, சமீபத்தில் பிரிட்டனில் வெற்றிகரமாகக் கையாளப்பட்டுள்ளது. இதுவரையில் கருத்தடை சத்திர சிகிச்சை, மக்களை நிரந்தரமாக மலடாக்கமட்டுமே செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காணப்படும் பட்சத்தில் குடும்பத்திட்ட முறைகளில் முதன்மையானதாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்று நம்பப்படுகிறது.

பெண்ணின் இரு சினைப்பைகளையும் ஒரு மெல்லிய பிளாஸ்டிக் பையால் மூடிவிடுதலே இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள தற்காலிக கருத்தடை சத்திர

## வகுப்புவாதிகளுக்கு இந்திரா ஆதரவு?

### காமராஜர் கண்டிக்கிறார்

சென்னை, மே 30

எல்லாச்சந்தர்ப்பத்திலும் அரசு சிறுபான்மையோருக்கு சாதகமாக இருப்பதின்மூலம்வகுப்புவாதத்தை வளர்த்து வருகின்றது என திரு. காமராஜ் மத்திய அரசின் மீது குற்றம்சாட்டி உள்ளார்.

சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில்சின்டிக்கெட் தலைவர்திரு. காமராஜ் மேலும் தொடர்ந்து கூறியதாவது:

## விசேட ஆராதனை

பண்டத்தரிப்பு, சனி

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பரிசுத்த தந்தை6-ம்சின்னபப்பாப்பரசரின் 50-ம் வருட பொன் யூபிலி விழாவையிட்டு சகல கத்தோலிக்க தேவாலயங்களிலும் விசேட ஆராதனைகள் நடைபெறுகின்றன. இவ்விழா இன்று

# அந்நிய செலாவணி சான்றிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையில் கருத்தடை சத்திர சிகிச்சை, மக்களை நிரந்தரமாக மலடாக்கமட்டுமே செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனில் உள்ள டெவன் மாவட்டத்தில் டோர்பே எனுமிடத்தைச் சேர்ந்த 25 வயதான மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவருக்கே, மேற்படி பரீட்சார்த்த தற்காலிக கருத்தடை சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இந்த சிகிச்சை நாளடைவில் பூரண திருப்தி அளிப்பதாகவும், இலகுவாகவும் சிக்கல் இல்லாததாகவும் பைகளையும் ஒரு மெல்லிய பிளாஸ்டிக் பையால் மூடிவிடுதலே இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள தற்காலிக கருத்தடை சத்திர சிகிச்சையாகும், வேண்டிய போது, இந்த பிளாஸ்டிக் பைகளை அகற்றிவிட்டால் மறுபடியும் கருத்தரிக்கலாம். நிரந்தரக்கருத்தடை முறையின்படி, பெண்ணின் கர்ப்பக்குழாய்கள் துண்டிக்கப்பட்டு, முடிச்சுப்போடப்படுகின்றன. துண்டிக்கப்பட்ட கர்ப்பக்குழாய்களை மீண்டும் இணைப்பது சிரமமாகக் கருதப்படுகிறது.

# லெபனனில் புதிய நெருக்கடி

பேருட், மே. 30

லெபனனில் கொரில்லாக்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக அங்கு புதிதாக நெருக்கடிகள் ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது.

பாலஸ்தீன கொமாண்டோக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக பாலஸ்தீன விடுதலை இயக்கங்களின் தலைவர் யசிர் அரபாட்டுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த லெபனன் அரசு முடிவுசெய்திருக்கின்றது. இதற்காக அரபாத் பேருட் வரவிருக்கிறார்.

லெபனன் எல்லைப்பகுதிகளிலிருந்து இஸ்ரேல் நிலைகள் மீது பாலஸ்தீன கொமாண்டோக்கள் தாக்குதல்களை நடத்தி வருவதைக் கட்டுப்படுத்தும் வகையில் லெபனன் அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது.

உத்தரவு இல்லாத ஆயுதங்களை நகரங்களில் எடுத்துச் செல்வதையும் லெபனன் எல்லையின் குறுக்கே இஸ்ரேலிய நிலைகள் மீது ரொக்கட்டுகளை ஏவுவதையும் எல்லைப்பகுதிகளில் அகழிகளைத் தோண்டுவதை லெபனன் அரசு தடுத்திருக்கின்றது.

## திருமணக் கோஷ்டி மீது பொலிசார் சூடு

சென்னை மே 30

இரயில் பிரயாணம் செய்த திருமணக் கோஷ்டி மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

ரயில் பிரயாணம் செய்த திருமணக் கோஷ்டியினர் அபாய அறிவுப்புச் சங்கிலியை இழுத்து புகையிரதம் இல்லாத இடத்தில் நிறுத்தி இறங்க எத்தனித்தனர். அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்தவரை பொலிசார் கைது செய்ய முற்பட்டபோது திருமணக்கோஷ்டியினர் பொலிசார் மீது கற்களை வீசினர் தற்பாதுகாப்பிற்காக பொலிசார் சுட்டதின் பேரில் ஒருவர் காயமடைந்தார்.

உடனடியாக பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து அமைதியை நிலைநாட்டினர்.

## ரஷ்யா கடற்படை அதிகாரிகள் கைது

லண்டன், மே. 30

பால்டிக் கடற்படையில் உள்ள அதிகாரிகள் பலர் அரசியல் துரோகக் குற்றம் சாட்டிக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசியல் சுதந்திரச் சங்கம் என்பதை இவ்வதிகாரிகள் அமைத்தனர் என்று கூறப்படுகின்றது ஐக்கிய நாடுகள் சபை மனிதஉரிமை பிரகடனத்தை அமுலாக்குவது அதன் நோக்கம், எனவும் கூறப்படுகின்றது.

அரசியல் துரோகம் என்ற அடிப்படையில் இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஒரு அதிகாரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும் வதந்திகள் கூறுகின்றன.

## வைரப் படிவம்

சென்னை, மே. 30

திருச்சி மாவட்டத்தில் கரூர் தாலுகாவில் வெள்ளியாணி அருகே நடுமேட்டுப்பட்டி என்னும் கிராமத்தில் நிலத்தில் வைரக் கற்கள் போன்ற படிவுகள் இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. இப்படிவங்களை மக்கள் எடுத்துச்செல்வதாகவும் தகவல் கிடைத்துள்ளது

சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில்சின்டிக்கெட் தலைவர்திரு. காமராஜ் மேலும் தொடர்ந்து கூறியதாவது:-

வகுப்புவாதத்தை அடக்குவதற்கு கடுமையான நடவடிக்கை மத்திய அரசு எடுக்க வேண்டும். ஆனால் மத்திய அரசு இது விஷயத்தில் சிறுபான்மையோரை ஆதரிப்பதாகக் கூறுகின்றது

வகுப்புவாதத்தினை அடக்க புதுடெல்லியில் கூடிய மகாநாடு மாநில முதலமைச்சர்கள் உண்மையான வகுப்பு வாதிகள் ஆகும்.

மதம் வகுப்பு, சாதி ஆகிய அடிப்படையில் இயங்கும் தலைவர்களுக்கே நாட்டில் இன்று பாதுகாப்பு இருக்கின்றது. தம்மை இந்தியர் எனக் கூறும் தேசியவாதிகளுக்கு அவ்வாறில்லை.

கத்தோலிக்க தேவாலயங்களிலும் அவருக்காகவிசேட ஆராதனைகள் நடைபெறுகின்றன. இவ்விழா இன்று கொண்டாடப்படவிருக்கிறது.

## வேலைக்குத் திரும்பினர்

கோட்டை, சனி

பத்துநாள் வேலை நிறுத்தத்தை முடித்துக்கொண்டு 2000, மதுல்சீமாதோட்டத் தொழிலாளர் வேலைக்குத் திரும்பியுள்ளனர். கடந்த மாதம் 15-ம் திகதி இவர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். இவர்களுடைய கோரிக்கைகள் சிலவற்றைக் கொடுப்பதற்கு நிர்வாகம் இணங்கியதைத்தொடர்ந்து வேலைக்குத் திரும்பினர்.

# மோட்டார் தொழிற்சாலை:

## தமிழ் நாட்டுக்கு மத்திய அரசுஆதரவு

புதுடில்லி, மே 30

தமிழ் நாட்டில் தற்போது மூடப்பட்டிருக்கும் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையை முதல்வர் கருணாநிதியின் கருத்து கிடைத்தபின் அதன் முழு விளைவுகளையும் சட்ட அம்சங்களையும் கவனமாகப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும். எவ்வாறாயினும் தமிழ்நாட்டு முதலமைச்சர் கருத்துக்குப் பாதகமாக கருத்துத் தெரிவிக்காது என மத்திய தொழில் வளர்ச்சி மந்திரி கூறினார்.

இத்தொழிற்சாலை நட்டம் காரணமாக மூடப்பட்டது திரு கருணாநிதி தொழிற்சாலையைஅரசாங்கம்எடுத்து நடாத்தும் என அறிவித்திருந்தார். அதுபற்றிய அறிவித்தலை உத்தியோக பூர்வமாக மத்திய அரசு இன்னமும் பெறவில்லை.

தமிழ்நாட்டு அரசு இத் தொழிற்சாலையை எடுத்து நடத்துமாயின் சகல உதவியும் அளிக்கும் என மத்திய தொழில் வளர்ச்சி மந்திரி கூறியுள்ளார்.

## "தீவிர சோஷலிஸக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும்"

புதுடில்லி, மே 30

இந்திரா காங்கிரஸின் பம்பாய் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீவிர சோஷலிஷத் திட்டத்தை அரசு அமுல் நடாத்த தவறிவிட்டதாக சந்திரசேகர், சி. சுப்பிரமணியம் ஆகியோர் மத்திய மாநில ஆளும் கட்சித் தலைவர்கள் மகாநாட்டில் பேசும் போது கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார்கள்.

வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதுடன் மக்களிடையே ஏற்பட்ட நம்பிக்கை தொடர்ந்து அரசு தீவிரக் கொள்கையை கடைப் பிடியாது வருவதினால் தளர்ந்து வருகின்றது. என திரு. சந்திரசேகர் குற்றம் சாட்டினார்.

திரு. சுப்பிரமணியம்விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது: 'மக்களுக்கு கொடுத்த உறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால் அரசு அழிந்து விடும். அன்றியும் உறுதிகள் நிறைவேறாது அரசு தொடர்ந்து ஆட்சியில் இருப்பதில் தார்மீக உரிமை எதுவும் கிடையாது என வலியுறுத்தினார்.

வங்கிகள் தேசிய மயமாக்கியதின் பயனை விவசாயிகள் அனுபவிக்க குறைந்த கடன் வசதி அளிக்கவும் கிராம மக்கள் கடன் பழுவால் அவதிப் படுவதை தவிர்க்க அடகுக்கடைகள் திறக்கப்பட வேண்டும் எனவும் திரு. சுப்பிரமணியம் கேட்டுக் கொண்டார்.

# அந்நிய செலாவணி சான்றிதழ் திட்டம் நிறுத்தப்பட்டது

கொழும்பு, சனி

கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் முதல் நடவடிக்கையாக பீக்ஸ் என்று கூறப்படும் அந்நிய செலாவணி சான்றிதழ் திட்டத்தை நிறுத்திவைக்கும் படி உத்தரவிட்டன.

இந்த உத்தரவு நாட்டிலுள்ள எல்லா வர்த்தக வங்கிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக்குறைக்கும் முகமாகவே இந்த அவசர நடவடிக்கையாகும்.

இந்தத்திட்டம் உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் அமுலுக்குகொண்டு வரப்பட்டது. இறக்குமதி செய்யப்படும் எல்லாப் பொருட்களினதும் விலைகளை அதிகரிக்கச் செய்யும் அதே சமயம் மறைமுகமாக நாணயமதிப்புக் குறைப்பாகவும் அமைந்ததாகக்கருதப்பட்டது.

இந்தத்திட்டத்தை உடனடியாக நிறுத்திவைக்க வேண்டும் என்று அரசாங்கம் எடுத்த முடிவு மத்திய கவர்னரின் உத்தரவாக எல்லா வர்த்தக வங்கிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

அந்நிய செலாவணி சான்றிதழ் திட்டம் சம்பந்தமாக புதிய கூட்டரசாங்கம் கடைப்பிடிக்கவிருக்கும் கொள்கை தெளிவுபடுத்தப்படும் வரை இத்திட்டம் தற்காலிகமாக நடத்தப்படமாட்டாது.

(சி. பி. ஏ:)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 31—5 70

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 சித்திரம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவு 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச் சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

12-00 செய்திச் சுருக்கம் 12-03 சித்திரகானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம் 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 நிலையஒலிப்பதிவுகள்.

இரவு 6-10 பேச்சு, 6-15 வாத்திய இசை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராம சஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 மூஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 தொழிலாளர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

# "அறிவை இழந்து செயல்படக்கூடாது"

— அமிர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழரசுக்கட்சியின்கொள்கைகளை அமுல் செய்வதில் நாம் கண்ணும் கருத்துமாக பணியாற்ற வேண்டும். கடந்த காலத்தில் இதற்காக நாம் பல தியாகங்களை செய்திருக்கிறோம். எந்த நிலைமையிலும், நாம் அறிவையிழந்து செயலாற்றக்கூடாது."

பண்ணாகத்தில் காலமான ஆறுமுகசாமி என்பவரின் இறுதிச் சடங்கின்போது தமிழரசுகட்சி பொதுச்செயலாளரும், முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

இறுதிச் சடங்கில், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, யாழ்ப்பாணம் எம்.பி. திரு. சி எக்ஸ். மாட்டின், ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா பொ. இரத்தினம் மற்றும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: மக்கள் சமாதானமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை தலைவர்கள் ஏற்படுத்தவேண்டும் சில கட்சித் தலைவர்கள் மக்களை வழிநடத்திச் செல்லாததினால் இப்படியான சம்பவங்கள் ஏற்படுகிறது. தலைவர்கள் கண்காணித்து ஒத்துழைப்பு வழங்கினால் இப்படியான குழப்பங்கள் ஏற்படாது. இளைஞர்கள் எந்த சூழ்நிலையிலும் உணர்ச்சி வசப்பட்டு அறிவை இழக்க கூடிய முறையில் நடந்து கொள்ளக்கூடாது.

## அமிர்தலிங்கத்தை...

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

ஒகார்க வரிசையாகநிறுத்தப்பட்டிருந்தன. கார்களில் கட்சிக் கொடிகள் காணப்பட்டன. தேர்தல் முடிவுகள் எல்லாம் அறிவித்து முடியும் வரை அப்பகுதியில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. பொலிஸார் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட சிறப்பாக கடமையாற்றினார்கள்.

## காணவில்லையாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் வீட்டில் வேலை செய்த சிறுவனும் சிறுமியும் திடீரெனக் காணாமல் போய்விட்டனர். இவர்களிருவரையும் வேறொரு வீட்டில் வேலைக்கு வைத்திருப்பதாகக் கிடைத்த புகாரைத் தொடர்ந்து வடபகுதி பொலிஸார் தேடிவருகின்றனர். ராஜலிங்கம் என்ற சிறுவனும் பஞ்சரத்தினம் என்ற சிறுமியுமே காணமல் போனவர்களாவர்.

(8-ம் கலத்தொடர்ச்சி)

கொண்டாடும்படி ஏற்பாடு செய்தவரும் சின்னப்பா தந்தையே

1920-ம் ஆண்டு வைகாசி 29-நாள் குருத்துவம் பெற்ற நமது தந்தை இன்று 50-ம் வருடப் பொன்யூபிலியைக் கொண்டாடுகிறார். எமது தந்தையின் சமாதான சக வாழ்வு உலகமக்களிடையே பரவ இறைவனை வேண்டுவோமாக!

—இ: பேர்னூஞ்

சபை, இந்தியா என்பன குறிப்பிடத்தக்கவை, மறியற்சாலைகளிலும் ஏழைகள் விடுதிகளிலும் அதிக நேரத்தைக் கழிப்பார்.

அவர் விடுத்த குடும்பக் கட்டுப்பாடு பற்றிய நிருபம் உலக மக்களிடையே நல்ல மதிப்புப் பெற்றுள்ளது. கிறீஸ்துவ சபைகளின் ஒற்றுமை முயற்சிகளில் அதிக ஆர்வம் கொண்டு உழைத்து வருபவர் சின்னப்ப பாப்புவே, சமாதான சகவாழ்வையே தமது இலட்சியமாகக் கொண்டு உழைத்து வருபவரும் அவரே தான்.

உலக நாடுகளிடையே சமாதானம் நிலைக்க வேண்டுமானல் மனிதர் தமக்குள் அமைதி பெறுவது அவசியம் அவர்களின் உள்ளம் திருந்துவது உடனடியாகத் தேவை என்று சமாதானம் பற்றிக் கூறியுள்ளார். வத்திக்கான் ராட்சியம் கடுகு போன்றதுதான் அதன் சக்தியை எடுத்துக் கூற முடியாது. தேவவல்லமை பொருந்திய தலைவராக விளங்குகிறார் பாப்பு உலகம் முழுவதிலும் உள்ள கோடிக் கணக்கான மக்களுக்குத் தலைவராய் சிரசில் மும்முடி புனைந்து கரத்தில் ஆயன் கோல் தாங்கி செங்கோலேச்சுகிறார்.

1965 ஐப்பசி மாதத்தில் ஐ. நா. சபை கூட்டத்தில் உலகத் தந்தை என்ற ரீதியில் உரையாற்றினார். 117 நாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய இச் சபையில் 45 மணிநேரம் பேசினார். அவரின் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு மணி முத்தாயிருந்தது. மிக முக்கியமான 3 விடயங்களைக் குறிப்பிட்டார். (1) குடும்பக் கட்டுப்பாடு. (2) உலக யுத்தம். (3) சமாதானம்.

2-ம் வத்திக்கான் சங்கத்தின் மூலம் திருச்சபையில் மறுமலர்ச்சியையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்திய பெருமை 6-ம் சின்னப்ப பாப்புவையே சாரும். அவரவர்களும் தமது சுய மொழியில் வழிபாடுகளை நடத்தலாமென்றும்புதிய பலஒழுங்குமுறைகள் மூலம்மாற்றம் பலவற்றையும் திருமறையில் புகுத்தியுள்ளார்.

உலகப் பசிப்பிணி போக்க பல்வேறு நாடுகளுக்கும் பெருமளவில் நிதியுதவி அளித்துள்ளார், ஆயினும் உலக சமாதானம் பற்றிய ஒரே ஒரு ஆசைமட்டும் அவர் உள்ளத்தில் எப்போதும் குடி கொண்டிருக்கிறது. ஆனல் வல்லரசுகள் இதனைப் புரிந்து கொள்ளவில்லை. வருடத்தின் தை 1-ம் திகதியைச் சமாதான தினமாகக்

(7-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எவனொருவன் மற்றவர்களால் வெல்லப்பட்டு விடுவானே என்று எண்ணுகிருனே அவன் நிச்சயம் தோல்வி அடைவான்.

— நெப்போலியன்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "ELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 17-ந் திகதி (31-5-70)


## புதிய பிரதம மந்திரி

பொது மக்களின் அமோகமான வாக்குகளைப் பெற்று திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா மீண்டும் இலங்கையின் பிரதமமந்திரி பதவியை ஏற்றிருக்கின்ருர். சென்ற முறையைவிட அவருக்கு இப்போது அதிக பலம் கிடைத்துள்ளது. உலகத்தின் முதல்ப் பெண் பிரதமர் என்ற புகழ்பெற்ற அவர் அதிகமான அனுபவங்களுடனே இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை வகிக்கமுன் வந்துள்ளதால் அவர்முன்னை விட அதிக வெற்றிகரமாக இந்தப் பெரும் பொறுப்பை நிறைவேற்றுவார் என்றே நம்புகின்ருேம்.

சென்ற ஐந்து ஆண்டுகளாக அவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிருர். முன்னர் பிரதமராக இருக்கையில் உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று பல தேசப் பெருந் தலைவர்களை நேரில் சந்தித்துப்பேசியுள்ளதுடன் இந்தியா-சீன சண்டையை வெற்றிகரமாக நிறுத்திவைத்து அந்த எல்லையில் சமாதானம் நிலவவும் அவர் பெரும் முயற்சி எடுத்ததும் குறிப்பிடத் தக்கதாகும். இலங்கைக்கு வெளியே சென்று பல சர்வதேச மகாநாடுகளில் கலந்துகொண்டு உலகப் பிரச்னைகளைப் பற்றி ஆராய்ந்திருக்கின்ருர், இவ்வளவு அரிய அனுபவங்கள் காரணமாக அவரது அரசியல் உள்ளம் விசாலமடைந்து அரசியல் ஞானிக்குரிய தகுதிகளைப் பெற்று மிகக் கடினமான புதிய பொறுப்பையும் கடமையைம் ஏற்கின்ருர். விஷயங்களை நுணுக்கமாக ஆழ்ந்து ஆராயும் திறனும் அஞ்சா நெஞ்சமும் அவருக்கு இருப்பதுடன் தந்தை வழியிலும் கணவனுர் வழியிலும் அதிக செல்வாக்கும் உண்டு.

இலங்கையின் பிரதம மந்திரியாக கடமை ஏற்றுள்ள அவருக்கு 'ஈழநாடு' தனது வாழ்த்தைத் தெரிவிப்பதுடன் அவரது நிர்வாக காலத்தில் இலங்கை முன்னேற்றமானதும் சுபீட்சமானதுமான பாதையில் தொடர்ந்து செல்லுமென்றும் நம்புகின்றது. இச்சமயத்தில் ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிருேம். நாடனைத்துக்கும்சிங்கள் மக்களுக்கும் அவர் தமது கடமையைச் செய்கையில் தமிழ் மக்கள்பால் நட்பான கொள்கையை அவர் பின் பற்றுவாரென்பது நமது நம்பிக்கையும் விருப்பமுமாகும். இப்படிச் செய்வதன் மூலம் அவர் பின்பற்றும் மேலான பௌத்த தர்மத்தைக் காரியத்தில் நிறைவேற்றியவருமாவார்.

தேர்தலுக்குப்பின் சிலர் உணர்ச்சிவசப்பட்டு குழப்பம் செய்ய முயலுவதை அறிந்ததும்பிரதமர் சற்றும் தாமதிக்காமல் ஒரு முக்கிய அறிக்கை வெளியிட்டுள்ளார்.

யாரும் குழப்பம் செய்ய வேண்டாமென்றும். அமைதியை பாதுகாப்பதுதான் தமக்கு உதவியாக இருக்குமென்றும் மக்களை அவர் கேட்டுக் கொண்டிருக்கிருர், அவரது இந்த வேண்டுகோளை தமிழ் மக்கள் ஆதரித்து பூரணமாக வரவேற்பதுடன் நாடெங்கும் அமைதியைப் பாதுகாக்க புதிய பிரதமரும் அனரது சகாக்களும் எல்லா முயற்சிகளையும் செய்வரென்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் அவருக்குக் கிடைக்குமென்றும் நம்புகிருேம்.

## பொய் வதந்திகள்

பொதுத்தேர்தல் அமைதியாக முடிந்தபின் சில பொய்வதந்திகள் கிளம்பி பொதுமக்களை வீண் கவலைக்கு உடபடுத்தியுள் கேட்டுக் கொள்கிருர்கள்.

வீண் வதந்தி விஷப்பாம்பென்பர் நாட்டில் கட்சிப் போட்டிகளால் அரசியல் உணர்ச்சி அதி

# "முழுமையான தொழிலாளர் உரிமை சாஸனம் அமுல் நடத்தப்படும்"

**புதிய அரசாங்கம் அடுத்த ஐந் தாண்டுகளில் செயல்படுத்தவிருக்கும் திட்டங்கள் பற்றிய விபரத்தின் இறுதிப் பகுதி இங்கு தரப்படுகின்றது.**

கொள்ளை இலாபத்தையும், பதுக்கலையும் திர்க்கும் போராட்டத்தில் நாம் மக்களினதும், அவர்களது ஸ்தாபனங்களினதும் உதவியை திரட்டுவோம்.

முழுமையான தொழிலாளர் உரிமைச் சாசனம் அமுல்படுத்தப்படும். தொழில் சட்டங்களைத் திருத்தி அமைப்பது, தொழில் உத்தரவாதச் சட்டம், சமவேலைக்குச் சம சம்பளம் வழங்கும் கொள்கையை அங்கீகரிப்பது, போதனு மொழியை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடுகளைஒழிப்பது, தொழிற் சங்கங்களை முதலாளிகள் கட்டாயமாக அங்கீகரிக்கச் செய்வது, போனஸ் அனுகூலங்கள், ஊழியர் சேமநல நிதி கொடுப்பனவுகளை அதிகரிப்பது, சேமநல சேவைகள் ஆகியனவும் இவற்றுள் அடங்கும்.

பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் அவ்வப்போது அமர்த்தப்பட்ட அல்லது தற்காலிக தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட கால சேவைக்குப் பின்னர் நிரந்தரமாக்கப்படுவதற்கும் தனியார்துறை ஊழியர்கள்முன் விசாரணை இன்றி வேலைநீக்கம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கும் சட்டங்கள் செய்யப்படும்.

எழுதுவினைஞர் பதவிகளுக்கும், நிர்வாகப் பிரிவுகளுக்கும் சுயபாஷைகளில் கல்விகற்றவர்கள் நியமிக்கப்படுவதற்குத் தனியார் துறை காட்டும் எதிர்ப்பு முறியடிக்கப்படும்.

1965 ஏப்ரலுக்குப் பின்னர் அரசியல் அல்லது தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காகவோ அல்லது 1966 ஜனவரி 8-ந் திகதிய வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றியதற்காகவோ வேலைநீக்கம் செய்யப்பட்ட தனியார்துறை ஊழியர்கள் நஷ்டஈட்டுடன் திரும்பவும் வேலைக்கமர்த்தப்படுவர். ஏனைய சகல தண்டனைகளும் அகற்றப்படும்.

கடும் உழைப்புத் தொழில்களிலும் பீடித் தொழில் போன்ற குடிசைத் தொழில்களிலும் தொழிலாளர்கள் சுரண்டப்படுவது குறிப்பாகப் பெண் தொழிலாளர்கள் சுரண்டப்படுவது ஒழிக்கப்படும்.

குழந்தைகளின் மதிய போசனத்தின் தரம் உயர்த்தப்படும்.

ஆரம்பக் கல்விப்பொதுப் பாடத்திட்டம் அமுல்படுத்தப்படும். நடுநிலைக் கல்வி பொதுவாகவே முழுமையான கல்லூரிகள் மூலம் அளிக்கப்படுவதுடன், இது விஞ்ஞான தொழில் நுட்பப் பயிற்சிக்குக் கூடுதல் அழுத்தம் கொடுப்பதாகவும் மனித சக்தித்தேவைகளை நிவர்த்திசெய்யும் விதத்திமெய்யும் விதத்திலும் அமைக்கப்படும்.

சுயபாஷைகளே போதனு மொழியாக இருக்கும் ஆங்கிலம் கற்பிப்பதற்கு தக்க வசதிகள் செய்து கொடுப்படும்,

தோட்டப்பாடசாலைகள் எடுக்கப்பட்டு தேசிய கல்வி அமைப்பில் இணைத்துக் கொள்ளப்படும்.

யு. என். பி அரசாங்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட உயர் கல்விச்சட்டம் இரத்து செய்யப்படும். முழுநேர உறுப்பினர்களுடன் கூடிய சர்வகலாசாலை கிராண்ட கமிஷன் ஸ்தாபிக்கப்படும். பூரண கல்விச் சுதந்திரம் வழங்கப்படும் நாடாளுமன்றத்தின் பொறுப்பிற்குடபடடு சாவகலா சாலைகள் சுயேச்சையாக இயங்குவது உத்தரவாதப் படுத்தப்படும்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுதி மான்யம். கடன் வசதிகள் அளிக்கப்படும் சர்வகலாசாலைகளின் நிர்வாக அமைப்புகளில் மாணவர்கள்பங்குபற்றுவர்.

இப்போதுள்ள பல்கலைக் கழகங்களின் பொதுத்தரம் உயர்த்தப்படும், வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மூன்று சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்படும்

இன்றுள்ள சுகாதார சேவைகள் நகரப்புற நாட்டுப்புற பிரதேசங்களில் தீவிர[illegible] படும் இப்போதுள்ள வைத்தியக் கல்லூரிகளையும் பயி

## மதம்

பெரும்பான்மையினரின் மதமான பௌத்தத்திற்கு உரிய இடம் அளிக்கப்படும் ஏனைய மத விசுவாசிகளுக்கு மதவழிபாட்டுச் சுதந்திரமும் தமது மதத்தை அனுஷ்டிக்கும் உரிமையும் உத்தரவாதமும் செய்யப்படும். தமது மதக்கோட்பாடுகளுக்கு ஏற்ற வாழ்க்கை நடத்துவதற்கு தேவையான பொருளாதார சமூக சூழ்நிலை உருவாக்கி அளிக்கப்படும்

## கலாச்சாரமும் விளையாட்டும்

தேசிய நூலக அமைப்பையும் ஒரு தேசிய கலையரங்கையும்நாடக, கலைஇசை நிறுவனங்களையும் கல்லூரிகளையும் நாம் அமைப்போம்.

திரைப்படக் கமிஷன் அறிக்கையின் ஆலோசனைகள், குறிப்பாக அரசாங்க ஸ்ருடியோக்களை நிறுவுவதும், அந்நியப் போட்டியிலிருந்தும், திரைப்பட விநியோகத்தில் ஏகபோக ஆதிக்கம் செலுத்தும் முதலாளித்துவ நலன்களின் சுரண்டலிலிருந்தும் உள்ளூர் திரைப்படத் தொழிலைப் பாதுகாப்பதும் ஆகியன இன்றைய தேவைக்கு ஏற்றவகையில் உசிதமான மாற்றங்களுடன் அமுல்படுத்தப்படும்.

சிருஷ்டி திறன் மிக்க ஆனுல் ஆதரவு தேவையான கலைஞர்கள் தமது கலைப் பணிகளை ஆற்ற உதவுவதற்கான ஸ்தாபனங்கள் அரசாங்க உதவியுடன் நிறுவப்படும்.

தனியார் பதிப்பகங்களின் சுரண்டலிலிருந்து ஆற்றல் மிகு எழுத்தாளர்களுக்கு விமோசனம் அளிக்க அரசாங்கப் பதிப்பகம் ஸ்தாபிக்கப்படும்.

தமது மொழிகளையும்கலாசாரங்களையும் வளர்க்கசகல இனங்களுக்கும் உதவி வழங்கப்படும்.

அரசாங்க உதவிபெறும் தேசிய விளையாட்டுச்சபையும் மற்றும் விளையாட்டுக்

கள் தமது பிரஜாவுரிமையை நிரூபிப்பதில் அனுபவிக்கும் கஷ்டங்கள் அகற்றப்படும்.

தேசிய விரோத, சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களைப் பொறுத்து பிரஜாவுரிமைச் சட்டத்தின் 24 [1] பிரிவு அமுல் படுத்தப்படும்.

## ஜனநாயகம்

மக்களின் ஜனநாயக உரிமைகளை கட்டுப்படுத்தும் அனைத்துச் சட்டங்களும் விதிகளும் ரத்துச் செய்யப்படும், அல்லது திருத்தி அமைக்கப்படும். பேச்சு ஸ்தாபன, கூட்ட ஊர்வல சுதந்திரம் சட்டத்திலும் நடைமுறையிலும் உத்தரவாதப்படுத்தப்படும் பத்திரிகைச் சுதந்திரம் உத்தரவாதப்படுத்தப்படும். தினப் பத்திரிகைகைகள் மீது இப்போதுள்ள முதலாளித்துவ ஏகபோகங்கத்தை ஒழிப்பதற்கான மார்க்கமாகப் பத்திரிகைகளுக்கு உற்சாகமளிக்கபடும். யு. எம்.பி. அரசாங்கத்தின் கீழ் ராஜய அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சகல சம்பவங்களும் குறித்து விசாரணை நடத்தவும் நடவடிக்கை எடுக்கவும் உசிதமான அமைப்பு ஸ்தாபிக்கப்படும்.

இலங்கையில் இயங்கும் சகல ஏகாதிபத்தியசீர்குலைவு ஏஜன்சிகளும் அகற்றப்படும்.

## வெளிநாட்டு விவகாரங்கள்

இலங்கையின் தேசிய நலன்களால் வழிநடத்தப்படும் சுதந்திரமான வெளிநாட்டுக்கொள்கையை நாம் பின்வரும் அடிப்படையில் பின்பற்றுவோம் (அ) எந்த இராணுவம் அல்லது வல்லரசு அணியிலும் கூட்டுச் சேராமை. (ஆ) 1956-ம் வருட பாண்டுங் மகாநாட்டிலும், 1961-ம் வருட பெல்கிரேட் மகாநாட்டிலும் 1964ம் வருட கெய்ரோ மகாநாட்டிலும் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளைக் கடைப்பிடித்தல். (இ) பழைய புதிய ஏகாதிபத்தியத்தையும், கலோனியலிஸத்தையும், இன ஆதிக்க வாதத்தையும் எதிர்ப்பது. (ஈ)

## கூட்டணியின் வெற்றி பற்றி அஸீஸ் பெருமிதம்

கோட்டை, சனி

''கூட்டணியின் வெற்றி தமது வெற்றி'' என்று மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறது ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்.

தோட்டத் தொழிலாளர்களின் மனத்தில் அச்சத்தை ஏற்படுத்தி அதன் மூலம் லாபத்தைப் பெறமுயன்ற வர்கள் தகர்த்தெறியப் பட்டுவிட்டனர்'' என்று ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்தலைவர் ஏ. அஸீஸ் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்

கூட்டாட்சியினர் பதவிக்கு மீண்டும் வந்தால் வகுப்புவாதம் மீண்டும் தலை தூக்கும் என்ற கற்பனையான அபாயத்தை சிருஷ்டித்து இரண்டுகொத்து அரிசி வேண்டாம், அரசாங்க பாடசாலைகள் மூலம் தோட்டத்தில் கல்வி வேண்டாம் என்று தோட்டத் துரைமாரோடு சேர்ந்து சில தொழிற்சங்கத் தலைவர்கள் பிரசாரம் செய்தனர் ஆனுல் இப்பிரச்சார வலையில் தொழிலாளர் விழாமல் தன் மானத்தை நிலைநிறுத்திக் கொண்டுவிட்டனர் என்று தெரிவித்துள்ளார்

ளைக் கௌரவிக்கும் அனைத்து நாடுகளுடனும் நேச பூர்வமான, பரஸ்பரம் நன்மை பயக்கும் உறவுகளைப் பேணுவது, ஜெர்மன் ஜனநாயகக் குயரசிற்கும் வியட்னும் ஜனநாயகக் குடியரசின் கொரியா ஜனநாயக மக்கள் குடியரசிற்கும், தென் வியட்னும் குடியரசு இடைக்காலப் புரட்சி அரசாங்கத்திற்கும் பூரண ராஜதந்திர அங்கீகாரம் அளிப்போம். இஸ்ரேல் அரசாங்கம் ஐ நா பந்தோபஸ்துக் கவுன்சில் 1967 நவம்பர் 22-ம் திகதியும், மற்றும் திகதிகளிலும் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கமைய நடந்து 1967 ஜூன் 4-ந் திகதிய யுத்தத்திற்குப் பின்னர் அபகரித்துக்கொண்ட ஐ. அ. கு.வினதும் சிரியாவினதும் ஜோர்டானினதும் பிராந்தியங்களிலிருந்து தனதுதுருப்புக்களை வாபஸ் பெறும்வரை, அல்லது சம்பந்தப்பட்ட இந்த அரபு நாடுகளால் ஏற்றுக்கொள்ளத்தக்க மற்றும் எந்த ஒரு தீர்வுக்கும் வரும்வரை இஸ்ரேலுடனுன ராஜரீக உறவும் மற்றும் உறவுகளும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும். ஒரு சோஷலிஸ ஜனநாயகத்தை ஸ்தாபிக்க திரு எஸ். டபிள்யு.ஆர் டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் 1956-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட முற்போக்கு முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக ஸ்ரீல, சு. க-ல ச ச க-க க ஐக்கிய முன்னணி மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்த விழைகிறது. அத்தகைய சோஷலிஸ ஜனநாயகம் ஏனையவற்றுடன் பின்வருவனவற்றைச் சாதிக்கும்

(1) இலங்கையின் சுதந்திரத்தையும், சுயாதிபத்தியத்தையும், ஐக்கியத்தையும், பிராந்திய முழுமையையும் பாதுகாக்கும். (2) பொருளாதார சமூக சலுகைகளையும் ஏற்றத்தாழ்வையும் சுரண்டலையும்ஒழித்துக்கட்டுவதுடன் சகல பிரஜைகளுக்

## 'வெற்றியும் வீழ்ச்சியும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'நடந்து முடிந்த தேர்தல் முற்போக்கு சோஷலிஸ வாதிகளின் வெற்றியையும். பிற்போக்கு என்று வீழச்சியையும் எடுத்துக்காட்டுகின்றது' என்று சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம், சி. சுப்பிரமணியம் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் கூறியுள்ளார்.

மேலும் அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளதாவது: சோஷலிஸக் கொள்கையை அமுல்நடாத்த கூட்டுமுன்னணிக்கு மக்கள் அனுமதி கொடுத்துள்ளார்கள்.

கடந்த காலத்தில் திரு பண்டாரநாயக்க அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்ததுபோல தற்போது கூட்டு முன்னணிக்கும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஆதரவு கொடுக்கும்.

ஜனங்களின் சகல பகுதியினருக்கு உத்வேகமூட்டி அவர்களை ஒன்றுதிரட்டி முக்கியப்படுத்தும்.

(4) மக்களின் தார்மீக - கலாச்சாரத்தை உயர்த்தும் (5) மக்கள், இன, மத, பால் செய்தொழில் வேறுபாடின்றித் தமது உரிமைகளை அனுபவிக்கவும் கட்டுப்பாடின்றித் தமது பொறுப்புகளை நிறைவேற்றும் வாய்ப்புகளையும் வழங்கும் (6 அதிகார வர்க்கப் போக்குகளை நோக்கி சகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாக முடிந்தபின் சில பொய்வதந்திகள் வெளிப்பி பொதுமக்களை வீண் கவ லைக்கு உடபடுத்தியுள் ளன. தேர்தல் முடிவுகள் வெளியானபின் ஒரு சில இடங்களில் உணர்ச்சி வசப்படடு மக்களால் சில அற்ப சம்பவங்கள் ஏற் பட்டது உண்மையே என் றும் ஆனல் இது அரசியல் கட்சி விரோதமேயன்றி வகுப்புவாதமல்ல வென் றும் ஆங்காங்கே பொலி சார் கடும் நடவ டிக்கை எடுத்து அச்சம்பவங்களை அடக்கி, பொது அமைதியைப் பாதுகாத்து வருவதாக வும், வீண் வதந்திகளைக் கேட்டு அஞ்சவேண்டாம் என்றும் பொலிஸ் அதி காரிகள் பொதுமக்களைக்

வீண் வதந்தி விஷப் பாம்பென்பர் நாட்டில் கட்சிப் போட்டிகளால் அரசியல் உணர்ச்சி அதி கரிக்குமென்று உணர்ந்த பொலிசார் உஷாராக இரு ந்து தகுந்த நடவடிக்கை எடுத்து வருவது பாரா ட்டத்தக்கது. பொது மக்கள் ஆதாரமற்ற வீண் வதந்திகளை நம்பாமல் அமைதியை உறுதியுடன் பாதுகாக்கப் பல விஷய ங்களிலும் கடமைப்பட் டிருக்கிருர்கள், புதிய பிர தமர் இவ்விஷயமாக வெளியிட்டுள்ள அறிக்கை அமைதியை பலப்படுத்த வும் பொது மக்களுக்கு நம்பிக்கை அளிக்கவும் பெரிதும் உதவ வேண் டும்.

மகாவலித்திட்டம்

# பொறியியலாளர் எதிர்ப்பை கைவிடத் தீர்மானம்

கோட்டை, ஞாயிறு

ஐக்கிய முன்னணிபொதுத் தேர்தலில் வெற்றியீட்டி யதை யொட்டி மகாவலி அபிவிருத்திச் சபை நிறுவ னத்தை எதிர்க்கத் தீர் மானித்திருந்த பொறியிய லாளர், தொழில் நுட்ப வியலாளர்ஆகியோர்தங்கள் தீர்மானத்தைக் கைவிட எண்ணியுள்ளனர்.

இவர்கள் தங்கள் எதிர் ப்பை முற்ருகக் கைவிடுவது குறித்து அடுத்த சிலதினங் களில்தீர்மானிப்பர் எனத் தெரிகிறது.

ஐக்கிய முன்னணியின் தலைவி திருமதி பண்டார நாயக்கா ஏற்கனவே ஆட்சி மன்றத்தில் மகாவலித் திட்டம் கையாளப்பட டுள்ள முறை பற்றி எதிர்ப் புத்தெரிவித்துள்ளார் ஆதலால் தாங்கள் மகாவலி அபிவிருத்தியை குறித்து எதிர்புப்த் தெரிவிக்கவேண் டிய அவசியமில்லை எனவிஞ் ஞான பொறியியல் தொழிற் சங்கங்களின்இணைப்புக்கமிட் டித்தலைவர் டாக்டர் டலஸ் விக்ரமசிங்கி தெரிவித்துள் ளார்.

# இமயமலை சிகரத்தில் ஜப்பானியபெண்கள்!

காடமாண்டு, மே 20

ஜப்பானிய மலையேறும் பெணகள் கோஷ்டி ஒன்று தமது முயற்சியில் வெற்றி கண்டுள்ளார்கள் இமயமலை யின் சிகரமொன்றில் வெற் றிக்கொடி நாட்டியுள்ளனர்

இமயமலையின்சிகரங்களில் ஒன்ருன அன்னபூரணா -3 (24737 அடி) என்பதை இரு ஜப்பானியபெண்கள்சென்ற டைவதில் வெற்றிஈட்டியுள் ளார்கள் இவர்களின்கோஷ் டியில் மொத்தம் 9 பேர் அடங்கி இருந்தனர்

இக்கோஷ்டியினர் பிராண வாயு என்பதனைத் துணைக்கு எடுத்துச் செல்லாமலே மலை க்குச் சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

இச்சிகரத்தை ஏற்கனவே பாரதக்குழுவொன்று சென் றடைந்தனர் ஆனல் பெண் கள் சென்றடைந்தது இதுவே முதல் தடவை யாகும்

இப் பத்திரிகை ''ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் 63-ம் இலக்க அவர்களது அச்சகத்தில் 1970 - ஆண்டு வைகாசி மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

லாளர்கள் சுரண்டப்படுவது குறிப்பாகப் பெண் தொழி லாளர்கள் சுரண்டப்படு வது ஒழிக்கப்படும்.

எல்லா ஒழுங்கீனங்களை யும் அகற்றும் நோக்குடன் 1965 மார்ச் மாதத்திற்குப் பின்னர் பொதுத் துறையில் செய்யப்பட்ட நியமனங்கள் புனராய்வு செய்யப்படும்

தோட்டங்களில் வாழும் தமது உறுப்பினர்களைச் சந்திக்கவும், கூட்டங்கள் நடத்தவும் தோட்டங்களுக் குள் பிரவேசிக்க தொழிற் சங்க ஊழியர்களுக்குஉரிமை வழங்கப்படும்.

ஏனைய முதலாளிகளைப் போலல்லாமல் வேலையிலி ருந்து விலக்கப்பட்ட தமது தொழிலாளர்கள் குடியிரு ப்பு, இடங்களிலிருந்து வெளியேற்ற அத்துமீறிப் பிரவேச கிரிமினல் சட் டத்தை நாடும் தோட்ட முதலாளிகள் இவ்வாறு செய்ய இடமளிக்கப்பட மாட்டார்கள்.

## வாலிபர்களும் குழந்தைளும்

நாட்டின் ஜனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமாக உள்ள வாலிபர்களின் பிரச் னைகள் விசேஷ கவனத்தை பெறும். இந்தப் பணியை வழி நடத்த வாலிபர் விவ கார சேமநலத் திணைக்களம் நிறுவப்படும்.

பயனுள்ள தொழில்களுக் குத் தேவையான ஆற்றலை இளைஞர்களுக்கு அளிப்பதற் காக நாம் தொழில்நுட்ப தொழில் பயிற்சிகளை விரிவு படுத்துவோம்.

பாடசாலைகளுக்குச் செல்லும் வயதை அடையாத குழந்தை களுக்குக் கின்டர்கார் டன், சிறுர் மடுவ வசதிகள் அளிக்கப்படும். இளம் பரம் பரையினருக்கு, கலாசார பொழுதுபோக்கு, தனிச் சிறப்பியல்பு வளர்ச்சிவிளை யாட்டுவசதிகளும் விடுமுறை இல்லங்களும் அளிக்க நட வடிக்கைகள் எடுக்கப்படும்

யு. என். பி. அரசாங்கம் இலவசக் கல்வித்திட்டத்தில் புகுத்தியுள்ள சகல குறைப் புகளையும், கட்டுப்பாடுகளை யும் நாம் ஒழித்துக்கட்டு வோம்.

பாடசாலைக்குப் போகும் பிராயத்தை அடைத்த பிள்ளைகள் அனைவரும் பாட சாலைக்குச் செல்வதை உத் தரவாதப்படுத்தவும், உப கரணங்கள், வசதிகள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆகியவற்றில், பல்வேறு வகைப்பாடசாலைகளுக் கிடையில் இப்போதுகாணப் படும் பெரும் தாரதம்மியங் களை ஒழிக்கவும் நாம் நட வடிக்கைகள் எடுப்போம்.

டுப்புற பிரதேசங்களில் தீவிரமாக விருத்தி செய்யப் படும் இப்போதுள்ள வைத் தியக் கல்லூரிகளையும் பயி ற்சி நிறுவனங்களையும் மேலும் வியாபிப்ப தன் மூலம் கூடுதல் டாக்டர் களும் தாதிகளும் மற்றும் வைத்திய ஊழியர்களும் கூடுதலாக பயிற்றுவிக்கப் படுவர்

அசுத்தமான உணவாலும் தண்ணீராலும் மற்றும் சுற் ருடல் குறைபாடுகளாலும் ஏற்படும் வியாதிகளை ஒழித் துக்கட்ட விசேஷ நடவடிக் கைகள் மேற்கொள்ளப் படும்

ஒழுங்கான வைத்தியப் பரிசோதனைகள் நடத்தவும் குறைபாடுகளையும் வியாதி களையும் உரிய காலத்தி குணப்படுத்தவும் மாகாணங் களிலும் கிராமங்களிலு முள்ள ஆஸ்பத்திரிகளில் பூரண வைத்தியக் கருவிகளு டன் கூடிய குழந்தைப் பிணி மனைகள் நிறுவப்படும்

மேற்கத்திய வைத்தியத் துடன் ஆயுள்வேதம் சித் தம் யுனுனி முறைகள் துரித மாகவிருத்தி செய்யப்படும்

## குடியிருப்பு

அரசாங்கத்தினதும் கூட் டுறவுகளினதும் உள்ளூர் ஆட்சி மன்றங்களினதும், தனியாரினதும் நடவடிக்கை களை இணைக்கவும் வியாபிக் கவும் கூடிய விதத்தில்வீட்டு நிர்மாணத்திற்கான முழு மையான ஒரு திட்டத்தை நாம் செயல்படுத்துவோம்

நகரங்களில் அரசாங்கமும் உள்ளூர் ஆட்சி மன்றங் களும்சேரி ஒழிப்புப் பணி களை மேற்கொள்வதுடன் மத்தியதர குறைந்தவருமா னம் உள்ளவர்களுக்கு குடி யிருப்புத் திட்டங்களை நிர் மானித்தளிக்கும், வாடகை க்கு விடப்பட்டுள்ள வீடு களை வீட்டுடமையாளர்கள் திருத்தவும், பேணவுமான சட்டங்களும் விதிகளும்கண் டிப்பாக அமுல் நடத்தப் படும் சகல கட்டடங்களும் வாடகைச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும்.

தமக்கும் தமது குழந்தை களுக்குமான தமது சொந்த வீடுகளை நிர்மாணிக்க விரும் புபவர்களுக்குநிலத்திற்கான உறுதிகளை சீர்செய்து கொடுப்பதன் மூலமும் நியாயமான விலைகளில் வீடு கட்டக்கூடிய காணியும் கட் டடப்பொருள்களும்கிடைக் கச் செய்வதன் மூலமும் குறைந்த வட்டியுடன் கூடிய கடன்வசதிகள் அளிப்பதன் மூலமும் நாம் உதவிகள் அளிப்போம்.

கப்படும்.

அரசாங்க உதவிபெறும் தேசிய விளையாட்டுச்சபை யும் மற்றும் விளையாட்டுக் கழகங்களும் உண்மையான விளையாட்டு வீரர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகை யில் திருத்தியமைக்கப் படும். விளையாட்டுகளுக்கும் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்குமான அரசாங்க உதவி மேலும் வியாபிக்கப்படும்.

அரசகரும மொழிச்சட் டத்தையும் தமிழ்மொழி விசேஷவிதி) சட்டத்தை யும் நாம் பூரணமாகவும் நியாயமான முறையிலும் அமுல் படுத்துவோம். நீதி மஸ்றங்களின் வேலைகளிலும் உயர்கல்வியிலும் உத்தி யோகமொழிக் கொள்கை அமுல்நடத்தப்படும்.

முழு நாட்டிலும் துரித மான பொருளாதார வளர் ச்சியை ஏற்படுத்துவது பல் வேறு இனங்களுக்கிடை யில் நிலவும் நெருக்கடிகளை தளர்த்தவும் சந்தேகங்களை அகற்றவும் உறுதியான அடிப்படையை அளிக்கும் என்று நாம் நம்புகிறோம். இத்தகைய அபிவிருத்தியை துரிதப்படுத்தும் அதேவேளை யில் இன, மத மற்றும் சிறு பான்மையினர் உட்பட எமது மக்களின் சகல பகுதி யினருக்குமிடையிலான ஒத் துழைப்பினதும் பரஸ்பர நம்பிக்கையினதும் மூலம் தேசிய ஐக்கியத்தை அதன் உண்மையான அர்த்த பாவத்தில் ஸ்தாபிக்க நாம் திடமாக முயலுவோம்,

## ஜாதிபாகுபாடு

தொழில் அரசாங்கத்துட ஞன தொடர்பு, பாதுநிலை யங்களுக்கும் இடங்களுக்கு மான பிரவேசம் ஆகிய விவகாரங்களில் இன மத நம்பிக்கை, சாதிகாரணமாக எந்த ஒரு பிரஜையும் எவ் விதப் பாகுபாட்டுக்கும் ஒதுக்குதலுக்கும் ஆளாக மாட்டார் என்பதை உத் தரவாதப்படுத்துவோம்

இனம், மத நம்பிக்கை, சாதி அல்லது மொழி ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு எந்தஒரு நப ருக்கோ அல்லது நபர் களுக்கோ எதிராக பலாத் காரத்தை தூண்டும்எவரும் சட்டத்தின் கடும் தண்ட னைக்கு இலக்காக்கப்படுவர்.

## பிரஜா உரிமை

1964-ம் வருட இலங்கை இந்திய ஒப்பந்தம் [ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம்] சொல் லிலும் உணர்விலும் முழு மையாக அமுல் நடத்தப் படும்,

சிங்களவரல்லாத இலங் கையின் வம்சாவழிப்பிரஜை

புதிய ஏகாதிபத்தியத்தை யும், கலோனியலிஸத்தை யும், இன ஆதிக்க வாதத் தையும் எதிர்ப்பது. (ஈ) உலக சமாதானத்திற்கும், ஆயுதப் பரிகரணத்திற்கு மான அனைத்து நடவடிக்கை களையும் ஆதரிப்பது (உ) ஏகாதிபத்தியத்தையும் கலோனியலிசத்தையும் எதிர்த்து அனைத்து தேசிய விமோசனப் போராட்டங் களுடன் ஒருமைப்பாட் டைத் தெரிவிப்பது, அவற்றை ஆதரிப்பது, (ஊ) இலங்கையின் சுதந்திரத்

ளாதார சமூக சலுகைகளை யும் ஏற்றத்தாழ்வையும் சுரண்டலையும்ஒழித்துக்கட்டு வதுடன் சகல பிரஜைகளுக் கும் சமமான வாய்ப்புகளை உத்தரவாதப்படுத்தும். (3) தேசிய உற்பத்தியை இடை யருது உயர்த்துவதன் மூல மும், சமூகம் உற்பத்திசெய் வனவற்றை மிகவும் நீதி யான முறையிலும் சமத்து வமான ரீதியிலும் பகிர்ந்த ளிப்பதன் மூலமும், மக்கள் தனிப்பட்ட கூட்டான சேம நலத்தையும், மகிழ்ச்சிகர மான வாழ்வையுமடைய

களை நிறைவேற்றும் வாய்ப் புகளையும் வழங்கும் (6 அதிகார வர்க்கப் போக்கு களை நோக்கிய சகல எத்த னிப்புகளையும், எதிர்ப்பது டன் அரசாங்கத்தின் ஜன நாயக அமைப்பையும் சுதந் திரமான பட்சபாதமற்ற ஒழுங்கான தேர்தல்கள் மூலம் தங்களது அரசாங் கத்தை சமாதானபூர்வ மாக மாற்றுவதற்கான மக் களின் மீறமுடியாத உரிமை உட்பட அவர்களின் ஜன நாயக உரிமைகளைப் பாது காத்து விரிவுப்டுத்தும்

தமிழ், ஆங்கில மொழிகளில்

அச்சு வேலை எதுவானாலும்

எங்களையும் விசாரியுங்கள்

எமது வர்த்தக அச்சகப் பகுதியில்

★ கடிதத் தலைப்புகள்
★ அறிமுக அட்டைகள்
★ பெரிய சிறிய பிரசுரங்கள் — பிரசுரித்தல்
★ புத்தகம் கட்டுதல்
★ புதியவகைப்பற்றுச்சீட்டுப்புத்தகங்கள்
★ பெரிய பதிவுப் புத்தகம்
★ கோடடித்தல்
ஆதியன.

குறைந்த கட்டணத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஊழியர்கள் திருப்தியான வேலை செய்கிருர்கள்.

சிறந்த சேவையே எமது நோக்கம்

ஈழநாடு (வர்த்தக அச்சகப் பகுதி)

தொலைபேசி: 389 த. பெ. எண்: 49,

63, சிவன்கோவில் மேற்கு வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org